www.tamilarangam.net

Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity

# சர்வதேசதமிழர்

தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை



சர்வதேசதமிழரின் நல்லெண்ணதூதுவர் பிரசாந்த் தியாகராஜன் தமிழகமுதல்வர்
மு.கருணாநிதிக்கு பொன்னாடை போர்த்துகிறார். அருகே தந்தை தியாகராஜன்





ரோப்பிய கமிசன் உறுப்பினர் சிலர் (1995 – 2000)



வடிவமைப்பாளர் ஆ.ஞானேந்திரன்

ஆசிரியர் தி.சிறிகந்தராஜா.

இலசமத்துவ ஆணையாளர் ராஜ் சந்திரன்
பிரிட்டிஷ் தமிழ்இலைகள் வெளியீட்டு விழாவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்.ஐ.றோயலா துறொண்கைம்:த.தியாகலிங்கம்
ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏககுண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா; வார்டோ:

## வாசகர் கடிதம்:

**அன்புள்ள ஆசிரியருக்கு,**
சர்வதேச தமிழர் தொடர்ந்துகிடைக்கப்பெறுவதற்கு நயமிகுநன்றிகள்! உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்கு –சர்வதேசதமிழர்–செய்துவரும் பங்கு என்னை வியக்கவைக்கிறது சிலபக்கங்களிலேயே,செறிவான பல விடயங்களைத் தெளிவாகத்தருகின்ற சர்வதேசத்தமிழர் விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசிலரின் விடா முயற்சியின் பரிமளிப்பு என்பதை என்னால் உணரமுடிகிறது.
பல்வேறு சமுதாயப்பணிகளில் உள்ளநேரமெல்லாம் உறிஞ்சப்படுவதால் எழுதவேண்டும்!எனும் எண்ணம் செயலாக வாய்ப்பின்றி போய்க் கொண்டேவருகிறது.சர்வதேசதமிழருக்கு என் வாழ்த்துக்களும், தங்களுக்கு என் பாராட்டுகளும்!
**சு.ஸ்ரீஸ்கந்தராஜா,**
**விக்ரோறியா-அவுஸ்ரேலியா**

---

**அன்பின் ஆசிரியருக்கு,**
சர்வதேச தமிழர் தொடர்ந்து வருவது கண்டு மிக்க மகிழ்ச்சி! இத்துடன் சந்தா அனுப்பி இந்த நல்முயற்சிக்கு ஊக்கம்தர விரும்புகிறேன்.இங்குள்ள மற்ற தமிழர்களும் சர்வதேசதமிழரை சுவைக்கிறார்கள்.சர்வதேசதமிழரை நன்கு சுவைத்து வரும் என்னை மெய்சிலிர்க்க வைத்த விடயம் என்னவென்றால் சிந்தனைத்தடாகத்தில் முன்புவந்த ஈ.வெ.ரா. பெரியார் கூறிய அந்த 4வரிக்குள் அடங்கிய நாஸ்திகம் பற்றிய கருத்துத்தான்! நம் சிந்தனைக்கெட்டாத விடயத்தை வெளியிட்டு நம்மையெல்லாம் சிந்திக்கவைக்க வேண்டியபொறுப்பு சர்வதேசதமிழரை சார்ந்தது!
–கற்றது கைம்மண்ணளவு,
கல்லாதது உலகளவு.
**ஐ.ரி.ரவீந்திரன்**-Greåker,Norway.

**பேரன்புடையீர்,**
இக்கடிதவழி தங்களிடம் தொடர்பு கொள்வதில் மகிழ்வடைகிறேன்.தங்கள் பெருமுயற்சியால் சர்வதேசதமிழரெனும் தமிழ்ச்சஞ்சிகை,நோர்வே நாட்டிலிருந்து வெளிவருவது குறித்து மட்டற்றமகிழ்ச்சி அடைகிறோம்.சஞ்சிகை சிறப்பாக இருந்தது.மேலும் மலேசியா,சிங்கப்பூர் தமிழர் பற்றிய செய்திகள் வந்தால் பன்னாட்டு தமிழர் பயனடைவர். மலேசியாவில் சிலம்ப அகாடமி எனும் வீரத்தமிழர் தற்காப்புப் பழங்கலையாம் சிலம்பக்கலை போதிக்கும் நிறுவனத்தை நடாத்திவருகிறோம்.இந்தோனேசியா,சிங்கப்பூர்,கனடா,இங்கிலாந்திலும் சிலம்பக்கலையை அறிமுகம் செய்துள்ளோம். மலேசிய பத்திரிகைகளை தங்களுக்கு அனுப்பிஉதவவும்,சர்வதேசதமிழரை இங்கு நன்கு அறிமுகம் செய்யவும் விரும்புகிறோம்.நன்றி!
**ஆ.அம்பிகா-தலைவர்,**
**மலேசிய சிலம்ப அகாடமி**
**Akademi Silambam,**
**no.118,Blk.A,Jln ss 19/7A,**
**Subang Jaya 47500**
**Petaling Jaya,Malaysia.**
**tl.603.7365404 fx.2489158**

---

**ஆசிரிய அன்பரே,**
தமிழ் தழைத்தோங்க,தமிழ்த்தாயின் பிள்ளைகளாகிய நம் அனைவரின் எண்ணங்களையும்,உந்துதலுடன் இணையவைக்கும் அளவில் தாங்கள் செய்துவரும் செயற்கரியசெயல் பெருமையுடன்,நன்றியுடன் பாராட்டப்படவேண்டிய ஒன்று!
ஆரையம்பதி க.சபாரத்தினம் எழுதிய முதல்எதிரி யார் தெரியுமோ? எனும் கவிதை இன்றைய சுயநலமனிதர்களை சிந்திக்கவைத்து சீர்படுத்தும் அருமையான அர்த்தம் கொண்டது.அவர் மேலும் இதுபோன்ற சீர்திருத்தக்கருத்துக்களை வெளியிட உளம்கனிந்த ஆவல்!
காரையூரான் இ.தியாகலிங்கம் எழுதும் பனிப்பூக்கள் நம்தமிழ்ப்பண்பாட்டை காக்கவேண்டிய அவசியத்தை கூறுகிறது.
**கன்னியாகுமாரி கா.சுகுமாரன்**
**ஓமான்-மத்தியகிழக்கு**

---

**ஆசிரியர் அவர்கட்கு,**
கடந்த இதழின் இந்தியதேர்தல் பற்றிய ஆசிரியர் கருத்து சிறப்பாக இருந்தது.நல்ல தலையங்கம் வரைந்து இருந்தீர்கள்.ஆனால் சுப்பிரமணியசுவாமி நரசிம்மராவின் தரகர்.அவரை தாங்கள் உயர்வாக குறிப்பிட்டமை,அவரைப்பற்றி தாங்கள் சரியாகப்புரிந்துகொள்ளவில்லை என்பதைத்தான் காட்டியது. அன்றைய தி.மு.க.அரசு கலைக்கப்படுவதற்கு முக்கியகாரணமாக இருந்தவர்,இந்த சுப்பிரமணியசுவாமியே! சிந்தனைத்தடாகம்,மகாபலிபுரம் கட்டுரை சிறப்பு!மகாபலிபுரம் நேரில்பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.பொள்ளாச்சி நசன் மிகச்சிறப்பாகவே சர்வதேசதமிழரை ஆய்வுசெய்திருந்தார்.தகவல்சேவை பல பயனுள்ள தகவல்களை தந்து வருகிறது.தொய்வின்றி தொடரட்டும்,தங்கள் இலக்கியப்பணி!!
**இரா.இரவி-மதுரை.1**

---

**அன்பின் ஆசிரியருக்கு,**
அன்பே தெய்வம்!உங்களை என்றாவது ஒருநாள் சந்திக்கும் ஆர்வம் இருக்கிறது.அதற்கு செயல்வீரர்கள் மேல் எனக்கிருக்கும் பற்றுதல் காரணமாக இருக்கலாம்.சர்வதேச தமிழர் நல்வாழ்வுக்கு பிரார்த்தித்து தங்கள் சேவை தொடரவேண்டும்! தமிழர்அறிவும் பெருகவேண்டும்!! எனும் வேண்டுதலுடன் விடைபெறுகிறேன்.என்றென்றும் அன்புடன்,
**வல்வை.பா.பாலேந்திரன்,**
**த.பெ.94, 5780**
**கின்சார்விக்,நோர்வே**

---

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**
என் திரையுலகவண்ணப்படங்களை அவ்வப்போது சர்வதேசதமிழருக்கு அனுப்புவதில்,பெருமகிழ்வடைகிறேன்.சர்வதேசதமிழரை தொடர்ந்து வாசிப்பதிலும்,உலகின் பல பகுதியிலும் நடக்கும் தமிழர் விடயங்களை அறிவதிலும் பேரானந்தம் கொள்கிறேன்! பிரகாசமான எதிர்காலத்துக்கு வாழ்த்துக்களும்! பாராட்டுகளும் உரித்தாகுக!!
**தமிழக திரைக்கலைஞர்:**
**பிரசாந்த் தியாகராஜன்.**
**40,North Usman rd,Thiagarajanagar,Madras 600017**
**Tel.44.8241995 Fx.8241998**
(சர்வதேசதமிழரின் நல்லெண்ண தூதுவராக பிரசாந்த் தியாகராஜன் அவர்களை நியமிக்கிறோம்.–ஆர்.)

---

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**
இலங்கையில் இனசமாதானம் நிலவவும்,மலையகமக்கள் முன்னேற்றம்,ஐக்கியத்துக்காகவும்,திரு.தொண்டமானும்,இலக்கியவளர்ச்சிக்கு திரு எஸ்.பொ.வும் 50வருடத்துக்கு மேல் பாடுபட்டமைக்காக நோபல் பரிசுசிபார்சு மிகப்பொருத்தமானதே!
**வை.கங்கைவேணியன்,கண்ணதாசன் நிறுவகம்,கொழும்பு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தியாகலிங்கம்;போலவோக:இரா.விஜய;போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் கின்சார்விக்:பா.பாலேந்திரன்;பிறத்வோக்:எஸ்.தங்கராஜா
பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன் 181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன் 181.4713060;மு.ஆறுமுகம் 181.5432126
கிருஷ்ணா வைகுந்தவாசன் 181.542 9787 செ.நாகேந்திரன் 181.5532190கனடா:பா.சிவலிங்கம்416.4497607;இ.வளர்மதி;
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/ அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்



## ஆசிரியர் கருத்து: தமிழர்களும் பத்திரிகைகளும்

பத்திரிகைகள் வெறும்செய்திகளை மட்டும் கொடுத்தகாலம் மலையேறிவிட்டது.பிரச்சனைகளை பல்வேறுகோணங்களில் அலசி அவற்றின் முப்பரிமாண தோற்றத்தை மக்களுக்கு மட்டுமன்றி அரசியல்வாதிகள், அரச இயந்திரநிர்வாகிகள், ஆயுதம் தாங்கும் பெருமக்கள் ஆகியோர்க்கு அளித்து, தீர்வுக்கு பல ஆலோசனைகளையும் முன்வைக்கலாம். கூரைக்குள் பாம்பு புகுந்தால் வீட்டையே கொளுத்துவோம்!என்ற கருத்தை பத்திரிகைள் துாபம்போட்டு வளர்க்கக்கூடாது.மாற்றுயோசனைகளை மக்கள் பலரும் பகிரும் இடமாக பத்திரிகைகள் விளங்கவேண்டும்.மற்றவர் கருத்தை மதிப்பதும் அதுபற்றி திறந்தமனதுடன் ஆரோக்கியமான விவாதங்களை நடாத்தி சரியான தீர்மானங்களை எடுக்க மக்கள் கருத்தை துாண்டலுமே பத்திரிகைகளின் பிரதான பணி! அரசுக்கோ, அதிகாரம்கொண்டோர்க்கோ ஆதரவாக தொடர்ந்து ஆமாம் சாமி!போடுவது, ஆபத்தானபாதைக்கே வழிகாட்டும் சரி, பிழைகளை சுட்டிக்காட்டுவது முடிவில் மக்கள்நல்வாழ்வு எனும் உயர்வுக்கே வழிதரும். இலங்கையில் சிங்கள பத்திரிகைகள் தமிழர்வெறுப்பு எனும் மாயஇருளைத் தோற்றுவதில் வெற்றிகண்டு நாட்டையே தவறாக வழிநடத்தி குட்டிச்சுவர் ஆக்கினர்.மேற்குலகிலும் பத்திரிகைகள் ஆசிய, ஆபிரிக்க, லத்தின்அமெரிக்க மக்கள் வருகை குறித்து எதிரிடையான விடயங்களை மட்டும் சுட்டிக்காட்டின. தமிழ்ப்பத்திரிகைகள் வர்த்தக நோக்கிலோ, பயஉணர்விலோ, கட்சிச்சார்பிலோ, இயக்கச்சார்பிலோ இயங்குவதைவிடுத்து, எது சரி?எது பிழை?என்பதை அன்புரிமையுடன் கண்டிக்கத் தவறக்கூடாது.அதுவே மக்கள் சரியான தீர்மானம் மேற்கொள்ள உரியபாதையை காட்டும்.

## சிந்தனைத்தடாகம்: தமிழகசிறையில் ஈழத்தமிழன்.!

*சிறப்பு முகாம்-- கிளைச்சிறை*
*மேலூர் 625106மதுரை மாவட்டம்*
*08.05.1996.*

மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்!ஈழத்தமிழனான எனக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து சட்ட விரோத அராஜகம் குறித்து எனக்கு நீதிமறுக்கப்படுவது குறித்து இங்கு விளக்கியுள்ளேன். இத்துடன் திண்டுக்கல் செசன் நீதிமன்றத்தில் என்மீதான வழக்கு விசாரணையின்போது நான் கொடுத்த வாக்குமூலத்தின் பிரதியை இணைத்து அனுப்கிறேன். இவற்றில் இருந்து எனக்கு நீதிமறுக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதை தங்களால் புரிந்துகொள்ள முடியும் என நம்புகிறேன்.

எனது விருப்புக்கிற்கு மாறாக உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக 11.12.95 அன்று துறையூர் சிறப்பு முகாமில் இருந்து மேலூர் சிறப்பு முகாமுக்கு என்னை மாற்றினார்கள். இங்குமாற்றப்பட்டது முதல் இதுவரை கடந்த ஆறுமாதமாக வழக்கு விசாரணை நடத்தபடாமல் வேண்டு மென்றே தாமதம் செய்யப்படுகிறது.. கொடைக்கானல் ரி.வி டவர் வெடி குண்டு வழக்கு என்மீது போடப்பட்டுள்ளது. இச் சம்பவத்திற்கும்எனக்கும் சம்பந்தம் இல்லை. உளவுப்படைகளின் சதித்திட்டங்களுக்கு உடன்படமறுத்தமையால் என்னை பழி வாங்க வேண்டும் என்பதற்காக இவ்வழக்கில் என்னை இணைத்துள்ளனர். பொய்வழக்கு போட்டதோடு போட்ட அவ்வழக்கையும் முடிக்காமல் வேண்டுமென்றே தாமதம் செய்யப்படுகின்றது. எனக்கு வழங்கப்படக்கூடியதண்டனையை விட அதிக நாட்கள் கழித்து விட்ட போதிலும் இன்னமும் என் வழக்கு விசாரணை முடிக்கப்படவில்லை. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பாகும் என்பார்கள். எனக்கு நீதிமறுக்கப்படுவது தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு நீதி மறுக்கப்படுவதற்கு ஓர் உதாரணம் ஆகும்..கடந்த ஆறு வருடங்களாக காவலில் வைக்கப்பட்டிருக்கிறேன் இன்னமும் வழக்கு முடிக்கப்படவில்லை..சாட்சிகள் விசாரணை யாவும் முடிவுற்ற நிலையில் வழக்கின் இறுதிக்கட்டத்தில் வேண்டுமென்றே இவ்வாறு செய்யப்படுகிறது. காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் இருப்பது சட்டவிரோதம் ஆகும். ஆனால் என்னை தொடர்ந்து மூன்று வாய்தாக்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை. ஏற்கனவே வேலூர் சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த வேளை இவ்வாறு ஆஜர்செய்யாமையால் என்மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு மதுரைசிறையில் அடைக்கப்பட்டேன்.இதை எதிர்த்து சட்ட நீதிமன்றில் நான்தொடர்ந்த வழக்கில் அரசுசெயலர் பாஸ்கரதாஸ் நிபந்தனையற்ற மன்னிப்புகோரியதுடன் இனி சட்டரீதியாகவே நடத்துவதாக உறுதியளித்தார்.ஆனால் மீண்டும் 3முறை என்னை ஆஜர்செய்யவில்லை. மேலும் 2 வாய்தாவின் பின் நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.அப்போது அரசவழக்கறிஞர்,வழக்குபோட்ட காவல்அதிகாரி ஆகியோர் வராததால் விசாரணை நடைபெறவில்லை. அடுத்த வாய்தா 11.06.96 ஆகும். வழக்கு விசாரணையின்றி தாமதமாவதற்கு அரசதரப்பினரே காரணமாவர்.தேர்தல் சமயத்தில் எனது வாக்குமூலம் பாதகமானவிளைவுகளை தமக்கு ஏற்படுத்தக்கூடும்,என அவர்கள் எண்ணியிருக்கலாம்.

இதுகுறித்து ஆளுனர், சர்வதேச மன்னிப்பு சபை,தேசியமனிதஉரிமை கமிசன் ஆகியவற்றுக்கு முறையிட்டும் எதுவித பலனுமில்லை.இச்சிறப்பு முகாமில் அடிப்படை வசதி,உரிமையின்றி சித்திரவதையும் செய்கிறார்கள். 8 நாள் நான் உண்ணாவிரதம் இருந்தேன்.தண்ணீர் பிரச்சனையும் இங்கு உண்டு.பெண்அகதிகளை கவனிக்க பெண்பொலிசார் இல்லை. நமக்குதவும் வழக்கறிஞர்கட்கு பல சிரமம் தரப்படுகிறது.ஊழல் நிறைய உண்டு.

புதிய தமிழகமுதல்வர் இது குறித்து தகுந்தநடவடிக்கை எடுக்கவேண்டும்

தோழமையுடன் ...சி.பாலசந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரைக்கலைஞர்.பிரசாந்த் ;மாயூரம்.சு.பாஸ்கரன்திருச்சி:ஜான்ராஜ்தேவர்;பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப ஈபா கலலூரி மதுரை: இரா. இரவி:சு.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:இரா.ஜெயசேதுபதி:: கதிர்.சம்பத்குமார் கேரளா: ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்;

**தென்கிழக்காசிய பயண அனுபவங்கள்: சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து**

செந்தோசா தீவை சந்தோசத்தீவு என அழைக்கலாமோ? எனத்தோன்றுமளவிற்கு சிறார்கள்,பெரியவர்கள் மிகவும் குதூகலத்துடன் இங்கு நீராடி,நீந்திவிளையாடி,மணற்றரையில் படுத்து,வெயிலில் காய்ந்து புதுமையான,பழமையானவற்றை இங்குள்ள கண்காட்சிகளில் கண்டு ரசித்து மனமகிழ்வர்.

வேர்ல்ட் றேட் சென்ரர்,மௌன்ற் பேபர் ஆகிய இடங்களிலிருந்து கேபிள்கார் மூலம் சந்தோசத்தீவை அடையலாம்.

முழுக் குடும்பத்துக்குமே தேவையான பொழுதுபோக்கு இங்கு உண்டு.ஆசியமாதிரிக்கிராமம் பலவகையான பிராந்தியஇனங்களின் உணவுவிடுதி,கலை,கைத்தொழில், கட்டிடக்கலை மாதிரிகளையும் கொண்டுள்ளது.வண்ணத்துபூச்சி பூங்கா,50வகையான 2500 வண்ணத்துபூச்சிகளை கொண்டுள்ளது. ஓர்கிட் பூங்கா, நீர்உலகவாழிகள் கண்காட்சி,முக்கியமாக பார்க்கக் கூடியவை.ஆசியாவிலேயே பெரிய அக்குவாரியமான இது 2000 வகையான மீன்களை கொண்டது. சுரங்கத்துள் நடக்கும்போதே மீன்கள்,சுறாக்கள் நம் கண் முன் கண்ணாடிச்சுவர்களை முத்தமிட்டுச்செல்லும்காட்சி மறக்கமுடியாதது. பன்ரசி ஐலண்ட் 13வகையான நீர் விளையாட்டுகளை கொண்டது. நீந்தல்,சறுக்கல்,பாய்தல்,என பலவகை உண்டு.வெப்பத்தில் அலைந்துவிட்டு வரும் உல்லாசப்பிரயாணிகட்கு குளிர்மைதருவது இவ்விடம் தான்.வொல்கனோ லாண்ட் பார்ப்பதற்கு புதுமையானது. மயன் நாகரிகம் அழிந்தமை பற்றியும் இங்கு அறிந்துகொள்ளலாம்.

பலவிதமான உணவுவிடுதிகளும் இங்கு உண்டு.

அரைபங்கு சிங்கமாயும்,அரைபங்கு மீனாயும் உள்ள சின்னம்,சிங்கப்பூரின் சின்னமாகும்.சிங்கப்பூர் ஆற்றருகே, பூங்காவில் 8மீற்றர் உயரசின்னம் காணப்படுகிறது.1827ல் கட்டப்பட்ட காலனிமாளிகை இன்று பாராளுமன்றக்கட்டிடமாக விளங்குகிறது.1871ல் தாய்லாந்து அரசர் சூலலங்கனால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட வெண்கல யானை முன்புறத்தை அலங்கரிக்கிறது.

ர.:பிள்ஸ் ஹோட்டல்,சேர்.ஸ்ரம்போட் சிலை,சுப்றீம் கோர்ட்,சிற்றி கோல், கிறாஞ்சி யுத்தநினைவாலயம்,யப்பானிய முற்றுகையால் இறந்தபொது மக்கள் நினைவாலயம் உல்லாசப்பிரயாணிகள் பார்க்குமிடங்களாகும்.

அரபுத்தெரு,சீனா நகர்,குட்டி இந்தியா பெரிதான மாற்றமின்றி தம்விசேட தன்மையை காட்டுவதாக உள. அரபுக்கள் வர்த்தகநோக்கில் இங்கு குடியேறி,இஸ்லாமையும் பரப்பினர். பல மலேயர்களை முஸ்லிமாக மாற்றினர்.சுல்தான் பள்ளிவாசல் இங்கு பிரபலமானது.அழகானது.

மலிவானவிலையில் புடவை,துணிமணிகளை இங்கு வாங்கலாம்.

சீனா நகர் ஒடுங்கியவீதிகள்,அழகானவீடுகள்,உணவுவிடுதிகள்,சீனகோவில்,கடைகள் பார்க்கத்தகுந்தவை. குட்டிஇந்தியா சிரங்கூன் ரோட்டில் அமைந்துள்ளது.துடிப்பான,பலவண்ண இந்தியகலாசாரத்தை இங்கு காணலாம்.அழகான பட்டுசேலைகளுடன் வரும் தமிழ்ப்பெண்களையோ பலநிற தலைப்பாகையுடன் போகும் சீக்கியரையோ இங்கு காணலாம்.சுவையான உறைப்பான இந்திய, தமிழ்உணவுவகைகட்கும் இவ்விடம் பேர் போனது.பூமாலைகள்,இசைக்கருவிகள்,சில்க் வகைகள்,வாசனைத்திரவியங்கள்,தங்கநகைகள் மற்றஇனத்தவரையே சுண்டி இழுக்கும் தன்மைவாய்ந்தவை! ஸ்ரீவீரமாகாளியம்மன்,ஸ்ரீ சிறினிவாசப் பெருமாள் கோவில்,மாரியம்மன் கோவில் என்பன இந்துக்களுக்கு பிரசித்தமானவை.

தேசியமியுசியம்(பொருட்காட்சியகம்) ,சாங்கி சிறை மியுசியம்,சீனா கலரி, நாணய கலரி,பெரநாகன் மியுசியம், விமானபடை மியுசியம்,றோயல் செலாங்கூர் மியுசிம் என்பன பார்க்கக் கூடியவை.

பல கிறிஸ்தவதேவாலயங்கள், முஸ்லிம்பள்ளிவாசல்கள்,இந்து,புத்த,செந்தோமிச,தாவோமிச கோவில்கள்,யூதர் ஆலயம்,15000 சிங்கப்பூர் சீக்கியர்கட்கான குருத்துவாரா என்பன பலசமயமக்கள் எப்படி அருகருகே ஒருவரைஒருவர் மதித்துநடப்பது என்பதற்கு சிங்கப்பூரை தவிர உலகில் எந்தநாட்டை உதாரணம் காட்டமுடியும்!

சாங்கி கிராமம்,கேலாங்,கட்டொங் ஒல்லாந்து கிராமங்கள் பொருட்கள் வாங்கக்கூடிய இடங்களாகும்.

வீடமைப்பு பகுதிகளான வூட்லான்ஸ்,மிசுன்,தோபாயோ,தம்பைன்ஸ் ஆகிய இடங்களில் மக்கள் வாழும் முறைகளை அறியலாம். காபர்வில்லா, கின்னஸ் கண்காட்சி மலேகிராமம்,நியுமிங் கிராமம், விஞ்ஞான நிலையம்,தாங் வம்ச நகர், என்பனவும் பார்க்கக்கூடியவை.

இங்கு,ஏர்போர்ட்வரி 15 டாலராகும். சிங்கப்பூரினுள் எவ்வளவு வெளிநாட்டுகாசும் கொண்டுவரலாம்.எவ்விதகட்டுப்பாடும் இல்லை.மது,வைன்,பியர் தலா 1லீற்றர், மலேசியா தவிர்ந்த வேறுநாடுகளிலிருந்து வரும் 18வயதுக்கு மேற்பட்டோர் கொண்டுவரலாம்.சிகரெட் போன்றவை கொண்டுவர முடியாது.புகைபிடிப்பதை குறைப்பது நோக்கமாம் தனிப்பட்டபாவனைக்கான உடுப்பு, தோல்பைகள்,சாக்லெட்,பிஸ்கட்,கேக் இமிடேசன் நகைகள் குறித்தளவு வரியின்றி உள்ளேகொண்டுவரலாம். தடுக்கப்பட்டபொருட்களாக,போதை மருந்து,போலி நோட்டுகள் என பல உண்டு.சிங்கப்பூர் தண்ணீர் சுத்தமானதால் குழாய் நீரையும் அருந்தமுடியுமாம்.

போதைமருந்து கடத்தலுக்கு மரணதண்டனையும்,பாவனைக்கு 10 வருட தண்டனை,அல்லது 20000 டாலர்அபராதம் உண்டு.

14 நாள் விசாவை நீடிக்கவேண்டுமாயின் குடிவரவுதிணைக்களத்துக்கு விண்ணப்பிக்கலாம்.போதிய காசும்,மீள்விமானசீட்டும் அவசியம். இந்தியா,பாகிஸ்தான்,சீனா மற்றும் சில நாடுகட்கு விசா தேவை. இலங்கை,அவுஸ்ரேலியா,பிரிட்டன் மற்றும்,பலநாடுகட்கு விசா தேவையில்லை.கிட்டவுள்ள தூதரகத்தில் விசா விதிகள் பற்றி விசாரிப்பது நலம்.ஏனெனில் விதிகள் மாறலாம். குப்பைபோடுவோர் முதலில் 1000 டாலர்,பின் 2000 டாலர் தண்டம் கட்டவேண்டியிருக்கும்.பகிரங்கமூடிய இடங்கள்,பஸ்ஸில் புகைபிடிப்பது 1000டாலர் அபராதம் பெற்றுத்தரும்.புகைபிடிப்போர் கவனம்!

சிங்கப்பூரிலிருந்து,எம்பயணம்,இந்தோனேசியா,தமிழர்வாழ் மெடான் நகர் நோக்கி–லெசர்வேர்ல்ட்–எனும் நோர்வேஜிய உல்லாசக் கப்பலில் குதூகலமாக ஆரம்பமாகியது.

**என்.எஸ்.பிரபு...நோர்வே**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரஷ்யா/மாஸ்கோ: க.சபாரத்தினம்;ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ்துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்,கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; பி.ஜெகதீசன்; ஜேர்மனி:க.செந்தில்;0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

## ஐரோப்பிய ஒத்துழைப்பு– உலகுக்கு ஒரு உதாரணம்!

ஆசியா,ஆபிரிக்காவின் பலநாடுகள் பல்லின,பல்கலாசார,பலசமய,பலமொழி மக்களை சமத்துவமாக,நீதியாக அமைதியாக,விஞ்ஞானரீதியாக,ராஜதந்திரரீதியாக,உண்மையான சனநாயகரீதியாக வழிநடத்த தவறியதால் நாட்டையே கெடுத்து குட்டிச்சுவர் ஆக்கி நாசம்பண்ணிக்கொண்டிருக்கும் இந்தவேளையில்,1940–45ல் ஜேர்மனியின் கிட்லர்,இத்தாலியின் முசோலினி என சில சர்வாதிகார நாசி கும்பல்களால் 2ம்உலகயுத்தம் உருவாகி,மீண்டும் அமைதிப்பூங்காவாகி அதிலிருந்து ஐரோப்பா துளிர்த்தெழுந்தது.பொஸ்னியயுத்தம் தோன்றியவிதம்,அது அடக்கப்பட்ட தன்மையிலிருந்தும் ஐரோப்பாவின் புதியதன்மை உணரப்பட்டுள்ளது. மக்கள் யுத்தகலாசாரத்தில் அனுபவம் பெறுவதும்,பாடம் கற்பதும்,எதிர்காலத்தில் சமாதானத்துக்கான புதியவழிமுறைகளை கையாள்வதும் உலகின் பலநாடுகளில் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

பிரிட்டன்,பிரான்ஸ்,நெதர்லாந்து,இத்தாலி,பெல்ஜியம்,ஸ்பெயின்,போர்த்துகல் என பல ஐரோப்பியநாடுகள் தமது காலனிகளாக பலஆசிய,ஆபிரிக்க தென்அமெரிக்கநாடுகளை,வைத்திருந்து அவை சுதந்திரம்பெற,புதிய உறவுகளை அவற்றுடன் வளர்க்கின்றன.ஐரோப்பியர்களால் ஆபிரிக்கர் அடிமைகளாக புதியகண்டமாம் வடஅமெரிக்காவை கட்டிஎழுப்ப அழைத்துச்செல்லப்பட்டனர்.அங்கு பல போராட்டங்கட்கு மத்தியில் இன்று கறுப்பர் இனம் சமத்துவ பாதைநோக்கி வெற்றிநடை போடுகின்றனர்.கறுப்பரான முன்னாள் அமெரிக்கபடைத்தலைவர்,கொலின் பவல் அதீத செல்வாக்குள்ளவராக கருத்துக்கணிப்புகள், அமெரிக்க ஜனாதிபதிதேர்தல் குறித்து காட்டியமை அமெரிக்க ஐரோப்பியர்கள் மத்தியில் நிறவாதம் பற்றிய புதிய சிந்தனையைத் தோற்றியுள்ளது. ஐரோப்பாவினுள் புகும் ஆசிய, ஆபிரிக்க அகதிகளால் இங்கு சேவைத்தொழில்,ஹோட்டல்துறை, உற்பத்தித்துறை, சுகாதாரத்துறை விவசாயத்துறை பதப்படுத்தும் துறை,மலிவான,படித்த தொழிலாள சக்தியை பெரும் சேவையைப் பெறுவதுடன்,பாரியவருமானமாக ஐரோப்பா வருமானவரி, பொருள்–சேவை மறைமுக வரியையும் பெற்றுக்கொள்கிறது.ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் அங்குபாரமாக வாழ்வதாக அண்மையில் ஒருதமிழ்த்தினசரி ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது.அது முற்றுமுழுதாக பிழையானகருத்து!

உதாரணமாக நோர்வேயில் வாழும் தமிழர்களில் 90வீதத்துக்குமதிகமானோர் தொழில்புரிந்து நேரடிவரியும் (சராசரி 30வீதம்)பொருள்–சேவை வாங்குகையில் மறைமுகவரியும் (23வீதம்)செலுத்துகின்றனர் ஐரோப்பாவிலோ,மற்றும் கனடா, அமெரிக்கா,அவுஸ்ரேலியா போன்ற மேற்குநாடுகளிலோ தமிழர்களில் தொழில்புரிவோரே அதிகம்!இதனால் வரும் வரிகளாலும்: மலிவான ஆசிய,ஆபிரிக்க உணவு,உடை இறக்குமதிகளாலும்,ஐரோப்பாவின் உயர்விலை,ஆடம்பரபொருள் கொள்வனவாலும் ஐரோப்பா தமிழர்களால் மட்டுமன்றி பன்னாட்டு குடியேறியவர்களாலும் நன்மையே பெறுகிறது.இது பலரால் உரத்துச்சொல்லப்படாவிடினும் சிலரால் விளங்கப்பட்டுள்ளது.பாழடைந்த நகரங்கள்,மூடப்பட்ட கடைகள்,நட்டத்தில்போகும்போக்குவரத்துகள்,மக்களே அற்ற கிராமங்கள்,விவசாயமற்ற நிலங்கள், துப்பரவற்ற தெருக்கள்,எனப் பல அமெரிக்காவிலும்,ஐரோப்பாவிலும் குடியேறியோரால் புதியபொலிவுபெற்றமை சிலரால் உணரப்பட்டுள்ளது.

தமக்குள் பெருமைபேசி,சண்டையிட்ட பலஐரோப்பியநாடுகள் இன்று யப்பான்,அமெரிக்கா,ரஷ்யாவுடன் சவால்விடுவதற்காக ஒன்றுபடவுள. 1888–1979 வரை வாழ்ந்த ஜோண் மொனத் என்பவர் தான் ஐரோப்பாவின் தந்தை எனஅழைக்கப்படுவர் சமாதானம்,சனநாயகத்தை பாதுகாக்க ஒன்றுபட்ட ஐரோப்பா அவசியம் என புதிய யுக்தியை முன்வைத்தவர் இவரே! இவரும் றொபேட் சூமனும்(1886–1963) 9–5.1950 ல் 2ம்உலகயுத்தத்தால் பாதிக்கப்பட்ட மேற்கு ஐரோப்பியநாடுகளை நிலக்கரி.உருக்கு சந்தை விடயத்தில் ஒத்துழைக்க சூமன் பிளான்(திட்டம்) என ஒன்றை கொண்டுவந்தார். 1951ல் 6 நாடுகள் சேர்ந்து பாரிஸ் ஒப்பந்தம் அமைத்தனர்.ஐரோப்பிய நிலக்கரி–உருக்கு சமூகம் உருவானது.(ECSC) அணுசக்தியை சமாதானவழியில் பாவிக்க ஒப்பந்தம் இடப்பட்டது. (EURATOM) 1957ல்அங்கத்தவநாடுகளிடையே சுதந்திரவர்த்தகம்,இறுதிநோக்காக –பொதுச்சந்தை–என பாரிய ஒத்துழைப்புதிட்டம்,தீர்மானிக்கப்பட்டது. (EEC)1970ல்,ஐரோப்பியசமூகம்(EC உருவாகி ,1993ல் ஐரோப்பியயூனியன் (EU)வடிவம் பெற்றது. இங்கு முக்கிய 3 அம்சங்கள் உள்ளன:

1.ஐரோப்பிய பொருளாதார, நாணய யூனியன்
2.உள்நாட்டு.வெளிநாட்டு பொது பாதுகாப்பு கொள்கை.
3.சட்டம்,நீதி குறித்த ஒத்துழைப்பு.

ஐரோப்பிய நாளாக மே.மாதம் 9ம் திகதி சூமன் திட்டத்தை குறித்து கொண்டாடப்படுகிறது.

1951ல் பெல்ஜியம்,ஜேர்மனி,பிரான்ஸ், இத்தாலி,லக்சம்பேக் 1973ல் டென்மார்க்,அயர்லாந்த்,இங்கிலாந்த் 1981ல் கிறீஸ்,1986ல் ஸ்பெயின்,போர்த்துகல் 1990ல் கிழக்குஜேர்மனி,1995ல் ஒஸ்றியா,பின்லாந்த்,சுவீடன் அங்கத்துவநாடாகின.

1987ல் ஒரே ஐரோப்பியசட்டம்(The sigle European act)மூலம் 71வீதவாக்குகளால் ஒரே சந்தை (The single market)தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.சூழல்பாதுகாப்புகொள்கை,சமூகக்கொள்கை,வெளிநாட்டுக்கொள்கை போன்றவிடயங்களில் ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட்டது.இது ஐரோப்பியயூனியன் அமைய அடித்தளமானது.

1993ல் பொதுசந்தை 4வகையான சுதந்திரத்தை வலியுறுத்தியது. பொருட்கள்,சேவைகள்,முதலீடு,மக்கள் ஆகியவற்றின் சுதந்திரமான இடம்பெயர்வுக்கு வழிகோரியது. போட்டிக்கட்டுப்பாடுகள்,சுங்கம்,எல்லைகள்,பாஸ்போட் கெடுபிடி தளர்த்தப்படல் அடிப்படை நோக்குகள்!

1997–99ல்(Economic union) ஐரோப்பியமத்தியவங்கி,பொதுநாணயம்,ஒருங்கிணைக்கப்பட்டபொருளாதாரகொள்கை திட்டமிடப்பட்டுள்ளன.

எதிர்கால தூரநோக்காக (Political union-Futurevision)சமாதானம்,சனநாயகம்,கொண்ட ஐரோப்பியஒருங்கிணைப்பு,உள்ளது(வரும்)

**The European Co-operation:An example to the world / by:N.S.P.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சர்வதேசதமிழர் தகவல்சேவை

. Due to the current immigration policy of the Norwegian government, only a limited number of student places are available to foreign students. The Folk High Schools receive large numbers of applications for these limited number of student places


# THE NORWEGIAN FOLK HIGH SCHOOL

**Informasjonskontoret for folkehøgskolen**
Sentrum
0154 OSLO

| Navn | Adresse | Telefon | Telefax |
|---|---|---|---|
| Agder Folkehøgskole | 4640 Søgne | 38 16 66 66 | 38 16 61 44 |
| Arbeiderbevegelsens Folkehøgskole | 2390 Moelv | 62 36 42 00 | 62 36 42 08 |
| Bakketun Folkehøgskole | 7650 Verdal | 74 07 85 44 | 74 07 82 25 |
| Birkeland Folkehøgskole | 4760 Birkeland | 37 27 62 55 | 37 27 65 38 |
| Bjerkely folkehøyskole | 2266 Arneberg | 62 95 31 22 | 62 95 37 18 |
| Borgund Folkehøgskole | Hatleholen, 6012 Ålesund | 70 14 21 20 | 70 14 08 89 |
| Buskerud Folkehøgskole | 3322 Darbu | 32 75 06 16 | 32 75 04 80 |
| Danvik Folkehøgskole | 3046 Drammen | 32 83 12 90 | 32 89 12 45 |
| Elverum Folkehøgskule | 2400 Elverum | 62 41 17 77 | 62 41 50 89 |
| Fana Folkehøgskule | 5067 Store Milde | 55 99 16 03 | 55 99 11 95 |
| Fjordane Folkehøgskule | Postboks 130, 6771 Nordfjordeid | 57 86 04 22 | 57 86 16 30 |
| Follo Folkehøgskole | Postboks 103, 1540 Vestby | 64 95 01 01 | 64 95 25 49 |
| Fosen Folkehøgskole | 7100 Rissa | 73 85 12 60 | 73 85 22 55 |
| Framnes Folkehøgskule | 5600 Norheimsund | 56 55 10 33 | 56 55 13 92 |
| Fredheim Folkehøgskole | 8250 Rognan | 75 69 03 55 | 75 69 02 29 |
| Fredly Folkehøgskole | 7353 Børsa | 72 86 30 43 | 72 86 30 71 |
| Fredtun Folkehøyskole | 3290 Stavern | 33 19 99 55 | 33 19 75 15 |
| Gauldal Folkehøgskule | 7087 Gimse | 72 87 02 38 | 72 87 02 38 |
| Grenland Folkehøgskole | 3945 Eidanger | 35 51 07 24 | 35 51 11 73 |
| Hadsel Folkehøyskole | 8450 Stokmarknes | 76 15 13 55 | 76 15 13 24 |
| Hallingdal Folkehøgskule | 3550 Gol | 32 07 46 55 | 32 07 48 66 |
| Hardanger Folkehøgskule | 5774 Lofthus | 53 66 11 80 | 53 66 15 62 |
| Haugetun Folkehøyskole | 1667 Rolvsøy | 69 33 56 11 | 69 33 70 07 |
| Hedmarktoppen Folkehøyskole | Postboks 1070, 2301 Hamar | 62 53 45 11 | 62 53 44 99 |
| Heimly Folkehøgskole | 9300 Finnsnes | 77 84 09 31 | 77 84 24 47 |
| Holtekilen Folkehøgskole | Micheletsv. 55, 1320 Stabekk | 67 53 38 53 | 67 59 12 30 |
| Hurdal Verk Folkehøgskole | 2090 Hurdal | 63 98 71 08 | 63 98 71 09 |
| Høgtun Folkehøgskole | 6639 Torvikbukt | 71 29 37 02 | 71 29 38 20 |
| Jeløy Folkehøgskole | Nokiavn. 20, 1516 Moss | 69 27 12 11 | 69 27 33 08 |
| Jæren Folkehøgskule | 4060 Kleppe | 51 42 06 55 | 51 42 15 75 |
| Kongshaug Folkehøgskole | 5228 Lepsøy | 56 30 54 50 | 56 30 64 24 |
| Kvås Folkehøgskole | 4592 Kvås | 38 34 77 01 | 38 34 78 83 |
| Lundheim Folkehøgskole | 4460 Moi | 51 40 11 05 | 51 40 18 62 |
| Malangssentret | 9056 Mortenhals | 77 72 72 71 | 77 72 72 08 |
| Manger Folkehøgskule | 5120 Manger | 56 37 30 81 | 56 37 43 10 |
| Møre Folkehøgskule | Postboks 14, 6151 Ørsta | 70 06 60 67 | 70 06 85 38 |
| Namdals Folkehøgskole | 7870 Grong | 74 33 11 28 | 74 33 18 99 |
| Nansenskolen | 2600 Lillehammer | 61 25 71 33 | 61 26 38 63 |
| Nordfjord Folkehøgskule | 6860 Sandane | 57 86 93 10 | 57 86 94 13 |
| Nordhordland Folkehøgskule | 5110 Frekhaug | 56 17 80 08 | 56 17 79 70 |
| Nordiska Folkhögskolan | Box 1001, S-442 25 Kungälv, Sverige | 095-46-303-10 945 | 095-46-303-64 831 |
| Nordmøre Folkehøgskule | 6650 Surnadal | 71 66 19 22 | 71 66 07 58 |
| Nordnorsk Pensjonistskole | 8924 Vik i Helgeland | 75 02 92 80 | 75 02 90 36 |
| Norsk Pensjonistskole | 3136 Melsomvik | 33 33 70 90 | 33 33 63 69 |
| Numedal Folkehøgskole/ Idrettsskolen | 3626 Rollag | 32 74 67 60 | 32 74 68 00 |
| Olavskolen Folkehøgskole | 5437 Finnås | 53 42 53 00 | 53 42 53 88 |
| Peder Morset Folkehøgskole | 7584 Selbustrand | 73 81 85 00 | 73 81 87 85 |
| Rauma Folkehøgskole | Raumavn. 2, 6400 Molde | 71 21 51 55 | 71 21 82 25 |
| Ringebu Folkehøgskule | 2630 Ringebu | 61 28 01 55 | 61 28 01 55 |
| Ringerike Folkehøgskole | 3500 Hønefoss | 32 12 15 55 | 32 12 33 49 |
| Risøy Folkehøyskole | 4912 Gjeving | 37 16 63 33 | 37 16 63 04 |
| Romerike Folkehøgskole | 2050 Jessheim | 63 97 09 10 | 63 97 34 10 |
| Ryfylke Folkehøgskule | 4230 Sand | 52 79 72 61 | 52 79 78 57 |
| Rødde Folkehøgskole | 7084 Melhus | 72 87 08 11 | 72 87 08 41 |
| Rønningen Folkehøgskole | Myrerskognv. 52 b, 0495 Oslo | 22 15 74 50 | 22 15 53 15 |
| Sagavoll Folkehøgskole | 3810 Gvarv | 35 95 51 00 | 35 95 57 25 |
| Sámi Álbmotallaskuvla/ Den Samiske Folkehøgskole | 9730 Karasjok | 78 46 72 44 | 78 46 71 64 |
| Sandvik Folkehøgskole | 8650 Mosjøen | 75 18 78 11 | 75 18 78 18 |
| Seljord Folkehøgskule | 3840 Seljord | 35 05 00 33 | 35 05 05 96 |
| Skiringssal Folkehøyskole | 3232 Sandefjord | 33 45 85 90 | 33 45 96 70 |
| Skjeberg Folkehøyskole | 1747 Skjeberg | 69 16 81 04 | 69 16 87 82 |
| Skogn Folkehøgskole | 7620 Skogn | 74 09 55 55 | 74 09 60 95 |
| Sogndal Folkehøgskule | Postboks 174, 5801 Sogndal | 57 67 20 33 | 57 67 31 45 |
| Solbakken Folkehøgskole | 2100 Skarnes | 62 96 12 45 | 62 96 21 63 |
| Solborg Folkehøgskole | Tjensvollvn. 44, 4021 Stavanger | 51 52 71 15 | 51 52 04 70 |
| Soltun Folkehøgskole | 9440 Evenskjer | 77 08 53 29 | 77 08 53 05 |
| Sund Folkehøgskole | 7670 Sakshaug | 74 15 32 20 | 74 15 32 10 |
| Sunnfjord Folkehøgskule | 6800 Førde | 57 82 11 77 | 57 82 67 71 |
| Sunnhordland Folkehøgskule | 5455 Halsnøy Kloster | 53 47 61 37 | 53 47 62 50 |
| Sunnmøre Folkehøgskule | 6065 Ulsteinvik | 70 01 03 32 | 70 01 21 30 |
| Svanvik Folkehøgskole | 9925 Svanvik | 78 99 50 92 | 78 99 51 25 |
| Toneheim Folkehøgskole | 2322 Ridabu | 62 52 45 42 | 62 52 90 87 |
| Torshus Folkehøgskule | 7320 Fannrem | 72 48 58 22 | 72 48 59 65 |
| Toten Folkehøgskole | 2850 Lena | 61 16 10 88 | 61 16 14 77 |
| Trondarnes Frilynte Folkehøgskole | Boks A, Trondenes, 9401 Harstad | 77 06 23 46 | 77 06 56 33 |
| Utgarden Folkehøgskule | Postboks 264, 4251 Kopervik | 52 85 50 50 | 52 85 50 40 |
| Valdres Folkehøgskule | 2920 Leira | 61 36 20 25 | 61 36 23 05 |
| Vefsn Folkehøgskole | Mosjøen, 8662 Halsøy | 75 17 24 11 | 75 17 24 46 |
| Vestoppland Folkehøgskule | 2760 Brandbu | 61 33 57 55 | 61 33 55 70 |
| Viken Folkehøgskole | 2800 Gjøvik | 61 17 66 11 | 61 17 65 60 |
| Voss Folkehøgskule | 5700 Voss | 56 51 16 13 | 56 51 09 78 |
| Vågan Folkehøgskole | 8310 Kabelvåg | 76 07 81 03 | 76 07 81 17 |
| Øytun Folkehøyskole | 9500 Alta | 78 43 55 77 | 78 43 60 40 |
| Ål Folkehøyskole og kurssenter for døve | 3570 Ål | 32 08 17 11 | 32 08 23 18 |
| Åsane Folkehøgskole | 5092 Hylkje | 55 19 01 40 | 55 19 08 08 |

www.tamilarangam.net


# யாழ்ப்பாணத்திலிருந்து உலகெங்கும் ஞான ஒளி பரப்பிய மாமுனிவர் சிவ யோகசுவாமிகளின் வாழ்க்கை வரலாறு



இலங்கை ஒரு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. சிவனுக்குரிய ஈஸ்வரங்கள் மலிந்த நாடு. சித்தர்கள் உலாவிய சிறப்புடைய நாடு. கைலாச பரம்பரையின் சித்தர்கள் நடமாடிய யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரம் என்னும் கிராமத்திலே 1872ஆம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி சிவயோகசுவாமிகள் பிறந்தார். இளம் வயதிலேயே தாயை இழந்த யோகநாதன் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள கொழும்புத்துறை என்னும் கிராமத்தில் வாழ்ந்த அவரது தந்தையின் சகோதரியால் வளர்க்கப்பட்டார். கல்லூரியில் யோகநாதன் பயின்ற காலத்திலேயே விவேகியாய்த் தாம் பயின்றவற்றை ஏனைய மாணுக்கர்களுக்கு விளக்கிக் குட்டிப் பிரசங்கியாராகவும் இருந்தார். தனது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்து கொண்டு அவர் கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராகக் கடமையாற்றினர். அப்போது தன் ஓய்வு நேரம் முழுவதையும் சமயப் பயிற்சியில் செலவிட்டார். தியானம், திருமுறை பாராயணம் போன்ற ஆன்மீக சாதனைகளை மேற்கொண்டார். ஆன்மீக சாதனை அவரை ஈர்க்கவே, இறுதியில் தனது முப்பதாவது வயதில் வேலையில் இருந்தும் விலகி தனது வாழ்வை முழுமையாக ஆன்மீக சாதனையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

### நல்லூரை நனைத்த ஞானவெள்ளம்

அக்காலத்தில் நல்லூர்த் தேரடியிலே வாழ்ந்த செல்லப்பா சுவாமிகளின் பெருமையைக் கூறக்கேட்ட யோகநாதன், ஒருநாள் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக நல்லூருக்குச் சென்றர். தனது சற்குருவை முதன் முதலில் சந்தித்தது குறித்து அவர் பின்னர் பல நற்சிந்தனைப் பாடல்களில் அழகாகக் கூறியுள்ளார். தேரடியில் யோகநாதனின் செவிகளில் ஒலித்தவை ஆரடா நீ? தேரடாவுள்! தீரடாபற்று!. மலைத்து நின்ற சீடனைப் பெருங் கருணையோடு நோக்கிய சற்குருநாதன் உன்னைத்தான் பார்த்திருந்தேன், உனக்கே பட்டம் சூட்டப் போகிறேன் வா வா என்று அருகிலழைத்து அன்போடு ஞான உபதேசம் அருளினர். அன்று முதல் ஐந்து ஆண்டுகள் செல்லப்பா சுவாமிகளுடன் வாழ்ந்து கடும் தவம் ஆற்றிய யோகநாதன் தனது சற்குருவிடமிருந்து தீட்சை பெற்று யோகசுவாமிகள் ஆனர். பின் தனது குருவின் ஆணைப்படி யோக சுவாமிகள் கால்நடையாக கதிர்காம யாத்திரை மேற்கொண்டார். ஓராண்டு காலம் இலங்கை முழுவதையும் பாதயாத்திரையாக அவர் சுற்றி வந்தார். பாத யாத்திரையை முடித்துக் கொண்டு குருவிடம் திரும்பி வந்த யோகசுவாமிகளைப் பார்த்துச் செல்லப்பா சுவாமிகள் கூறினர். யோகா! இரண்டு யானைகளை ஒரு முளையிற் கட்ட முடியாது. நீ கொழும்புத்துறைச் சந்தியில் இலுப்பை மர வேரைப் பார் என்றர்.



### ஆசான் அருளால் ஆசானுயினர்

தனது குருவின் ஆணைப்படி யோகசுவாமிகள் கொழும்புத்துறைச் சந்தியில் இருந்த இலுப்பை மரத்தடியில் பல நாட்களாக தியான நிலையில் அமர்ந்திருந்தார். பலமுறை வேண்டிக் கேட்டுக் கொண்ட பிறகு, இலுப்பை மரத்துக்கு அண்மையில் அடியவர்களால் அவருக்கு என அமைக்கப்பட்ட ஒரு சிறு குடிசையில் யோகசுவாமிகள் தங்கினர். இது 1914 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. யோகசுவாமிகள் தனது வாழ்வின் அடுத்த ஐம்பது ஆண்டுகளையும் கிடுகுகளால் வேயப்பட்ட அந்தச் சிறு குடிசையிலேயே கழித்தார். தொடக்கத்தில், அணுகுவதற்கு முடியாதவராயிருந்தார். ஆனல் காலப் போக்கில் சில அடியவர்களை அருகில் வர அனுமதித்தார். மிக விரைவில் அந்தக் கொழும்புத்துறைக் கொட்டில் இலங்கை முழுவதற்கும் அருள் வழங்கும் ஆன்மீகத் திருவுருவத்தின் ஆச்சிரமமாக மாறியது. வாழ்வின் பலதுறைகளைச் சார்ந்த மக்களும் இக் குடிசைக்கு வந்தனர். இளையோர், முதியோர், கமக்காரர், மந்திரிகள், நீதிபதிகள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள் - ஆம் அனைவரும் உண்மையை நாடியே அக் குடிசைக்கு வந்தனர். இத் தருணத்தில் ஒருநாள் தனது குருநாதர் செல்லப்பா சுவாமிகள் நோய்வாய்ப்பட்டிருப்பதாக அறிந்து அவருக்குப் பணிவிடை செய்வதற்காக யோகசுவாமிகள் விரைந்து சென்றர். அவர் வருகையை உணர்ந்த செல்லப்பா சுவாமிகள் அவர் உள்ளே செல்வதன் முன் அவருக்குக் கேட்கும்படியாக உரத்த குரலில் வெளியே நின்று பார் என்றர். யோகசுவாமிகளும் குருநாதர் சொற்கேட்டு, உள்ளே போகாமல் வெளியே நின்று அகக் கண்ணுல் அவரைக் கண்டு வணங்கினர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மட்டக்களப்பு:கோபிரவி;மாத்தளை: எம்.அருள்பிரகாஸ்; தவ.சஜிதரன திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் மயில்வேந்த ன்: அட்டன்:பாலா சங்குப்பிள்ளை;குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்;அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி

காட்சிகள் ஆரம்பமாயின. எல்லோரும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். நடேசலிங்கம் வைத்த கண் வாங்காமல்ப் பார்த்துக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தின்பின் மெதுவாகத் திரும்பி நடேசலிங்கத்தைப் பார்த்தான் ஜெகன் முன்னாலிருந்த திரையிலிருந்து வந்த அந்தச் சிறிய வெளிச்சத்தில் அவரின் கன்னத்தில் வழிந்துகொண்டிருந்த கண்ணீர் பளிச்சென்று மின்னியது. மெதுவாக அவர் அதைத் துடைத்துக் கொண்டார். ஜெகன் பார்த்ததை அவர் கவனிக்கவில்லை. கண்ணிமைக்காமல் படத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். ஜெகன் திரும்பி மீண்டும் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். நடேசலிங்கம் மட்டுமல்ல அங்கிருந்த அனைவரின் மனதையும் உருக்கியது அந்தப் படம். ஜெகனும் அதற்கு விதிவிலக்கல்ல.

படம் முடிந்ததும் சீலன் குடும்பத்தினரோடு வசந்தாவும், அனுஷாவும் முன்னால் போய்க்கொண்டிருந்தனர். ஜெகனோடு நடேசலிங்கம் பின்னே போய்க் கொண்டிருந்தார் சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை. "என்ன பேசாமல் வாறியள் படம் எப்பிடிப் பார்க்கக் கூடய படமோ?" ஜெகன் கேட்டான்."இல்லை ஜெகன் பொழுது போக்குவதற்காக இந்தப் படத்தைப் பார்ப்பம் எண்டுதான் நான் வந்தன். ஆனால் படத்தைப் பார்த்த பிறகுதான் எங்கட நாட்டில என்ன நடக்குதெண்டு தெரியுது. படத்தில நாங்க பார்த்த எல்லாம் உண்மையாக நடந்த சம்பவங்கள்தான். இவ்வளவு காலமும் எங்கட படங்களை உதாசீனம் செய்ததுக்காக நான் வேதனைப்படுறன் ஜெகன். எங்கட நாட்டில சனம் எவ்வளவு கஸ்டப்படுதெண்டு இப்பதான் எனக்குத் தெரியுது. நீர் சொன்னதுபோல புகழுக்காகவோ. வருமானத்திற்காகவோ எடுத்த படமில்லை இது. நானும் எத்தினையோ படங்களைப் பார்த்திருக்கிறன் ஆனா இந்தப் படங்களைப் பார்க்கிறபோது ஏற்படுற உணர்ச்சி அதில இல்லை. எத்தனை சோகப் படங்களைப் பார்த்தாலும் நான் கண்கலங்குவதே இல்லை ஆனா இந்தப் படத்தைப் பார்த்தபோது என்னையறியாமலே அழுதிட்டன். திரைப்படத் துறையில வளர்ச்சியடைந்த இந்தியப் படங்களுடன் ஒப்பிட முடியாவிட்டாலும் மனதைக் கலங்க வைக்கிற காட்சிகள், சம்பவங்கள் யாரையும் உருக வைக்கும்" என்று படத்தைப்பற்றி இடைவிடாது விமர்சித்துக் கொண்டே போனார் நடேசலிங்கம். ஜெகன் இதைக் கொஞ்சம்கூட எதிர் பார்க்கவில்லை. இந்தியத் திரைப்படங்களைப் பார்த்துவிட்டு அதைப்பற்றியே கதையளக்கும் இவர் இன்று எமதுநாட்டுப் படங்களில் ஒரு படத்தைப் பார்த்துவிட்டு எப்படி மாறிவிட்டார். " உண்மைதானண்ணை ஆரம்பத்தில இந்தியப் படங்கள்கூட நாட்டுக்கூத்தும், நாடகமாகவும் இருந்துதான் இன்றைக்கு வளர்ந்திருக்குது. நான் திரைப்படத்துறையினரை குற்றம் சொல்லவில்லை அவர்கள் நல்ல கலைஞர்கள், நல்ல கலையார்வம் கொண்டவர்கள். ஆனா அவர்களில் ஒருசிலர் மட்டும் ஈழத்திலே புனிதமான லட்சியத்துக்காகவும், எமது சுயஉரிமைக்காகவும் நடக்கிற போராட்டத்தைச் சில படங்களில கொச்சைப்படுத்துவதையும், ஏளனம் செய்வதையும் பார்க்க மனசுக்கு வேதனையா இருக்கு" எனக் குறை பட்டுக் கொண்டான் ஜெகன். இன்று பார்த்த அந்தப் படம் நடேசலிங்கத்தாரின் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. தாய் நாட்டினமீதும், மக்களின்மீதும் ஒருவித பற்று உண்டானது."காலம் காலமாக சிங்கள இனவெறி அரசு எம்மை அடிமைகளாக்கி முன்னேறவிடாது வைத்திருந்ததனால்தான் எமது கலைகள் எல்லாம் முடங்கிக் கிடந்தன. ஆனால் இன்று நிலமை மாறி வருகின்றது. எமது கலைஞர்கள் துளிர்விட ஆரம்பித்துள்ளார்கள் அவர்களை இந்தியத் திரைப்படத் துறையினரோடு இப்போது ஒப்பிட்டுப் பார்த்தது என் தவறுதான்" என்று ஜெகனிடம் சொல்லி வேதனைப்பட்டார். "உங்களைப்போலவே ஒவ்வொரு ஈழத் தமிழரும் மாறவேண்டும் மேல்நாட்டு மோகத்தையும், சீர்கெட்ட கலாச்சாரத்தையும் மறந்து எமக்கென்று ஒரு நாடுவேண்டும் என்றும், எமது மொழி, கலை, கலாச்சாரத்தை மதிக்க வேண்டும் என்றும் ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். திரைப்படத் துறையிலே விழுதுவிட்டு வேரூன்றி ஆலவிருட்சமாக இந்தியா வளர்ந்து நிற்கிறது. ஆனால் எமது தமிழீழத்தைப் பொறுத்தவரை இப்போதுதான் **"அரும்புகள்"** ஆக துளிர்விட்டு வளர்ந்து கொண்டிருக்குது. அரும்புகளாக வளர்ந்துகொண்டிருக்கும் எமது படங்களை "அரும்புகழ்" அடையச் செய்வது எங்கள் ஒவ்வொருவர் கையிலும்தான் இருக்கு" என்று நடேசலிங்கத்தாரைப் பார்த்துச் சொன்னான் ஜெகன்.

## வைகுந்தவாசனின் நூலுக்கு

ஈழநாட்டு மக்கள் தங்களுக்கென்று ஒரு தனி நாடு வேண்டும்; இன்றேல் வாழமுடியாது என்ற நிலைக்கு வந்து உரிமைகளைப் பெற போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீலங்கை ஒரே நாடு. நீங்கள் இந்நாட்டு மக்கள் நீங்கள் எங்களோடு இருந்துதான் ஆக வேண்டும் என்று கூறிக்கொண்டே அச்சிறுபான்மை மக்களை தரைப்படை, கடற்படை, விமானப்படை முதலியவைகளால் தாக்கி அழித்துக் கொண்டிருக்கும் கொடுமையை இலங்கையில் தான் பார்க்கமுடிகிறது. எல்லா வலிமைகளும் நிறைந்துள்ள ஒரு அரசோடு எவ்வித வலிமையும் இல்லாத ஒரு தனி மனிதன் பிரபாகரன் இரண்டு ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கிறான் என்ற செய்தி நம் உள்ளத்தைத் தொடுகிறது. திரு. பிரபாகரன் வெற்றி பெறுவானா ? தோல்வியடைவானா ? என்பது வேறு செய்தி. அவன் அடையப் போவது வாழ்த்தா ? வசையா? என்பதும் வேறு செய்தி. அவனது செயல் நல்லதா ? கெட்டதா ? என்பதில் மாறுபட்ட கருத்தும் இருக்கலாம். ஆனால் தந்தை செல்வாவின் வழிவந்த அவன் ஒரு மாவீரன் என்பதில் மாறுபட்ட கருத்து அவருக்கும் இருக்க முடியாது என்பதை இந்நூலால் நன்கு அறிய முடிகிறது. என் நாடு தமிழ்நாடு என் மொழி தமிழ்மொழி. ஆகவே நான் தமிழன் என்று கூறுகிற ஒவ்வொருவரும் இந்நூலை கட்டாயம் படித்துத் திரவேண்டும். ("ஐ நாவிப் நமழ்ச்")

ஆசிரியர் பாரிஸ்டர் திரு. வைகுந்தவாசன் அவர்கள் இன்னும் இது போன்ற நூல்கள் பலவற்றை எழுதி தமிழ் கூறும் உலகிற்கு வழங்கி உதவவேண்டுமெனவும், தமிழ்மக்கள் அவற்றைப் படித்துப் பயனடைய வேண்டுமெனவும் வேண்டிக் கொள்கிறேன்.

**- கி.ஆ.பெ.விசுவநாதன்**

www.tamilarangam.net

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளைபுருணை: எம்.ஜ.எம்.நகீப் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தாசிங்கப்பூர்:மு.பத்மா கு.இரஞ்சகுணாளன் மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் .இர.ந.வீரப்பன்இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்;மு.சந்திரசேகரன்;யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன்;லட்சுமணன் பர்மா:அப்துல் ரசாக்

## பிரபஞ்ச மர்மம்!

**டாக்டர்ஆ.விசாகரத்தினம்**

**லண்டன்–இங்கிலாந்து**

உலகமக்கள் அனைவரும் தூய்மையாகவும்,சுகமாயும்,ஆனந்தமாகவும் இருக்கவேண்டும்,என கருதுவதால் இந்தஉரையை உங்கள் முன்வைக்கிறேன்.

எனது இளமைக்காலத்தில் இராணுவத்தில் சிங்கப்பூரில் சேவை செய்தகாலத்தில்,அங்குள்ள இராணுவநூலகத்தில் சித்தகுமாரன் எனும் சிறியதமிழ் நூலைக்கண்டேன். அதில் இடைக்காடர் எனும் சித்தரின் பாடல் நம்வாழ்வின் தத்துவ விளையாட்டை கூறியிருந்தது. அது உலகமர்மம் பற்றி ஆராய வித்திட்ட பாடலாகும்.அதில் கீச்சு மூச்சு தம்பலம்!கீயோ,மாயோ தம்பலம்!மாச்சு மாச்சு தம்பலம்!மாயமாய தம்பலம்! என்றிருந்தது.இது என் பாலிய பருவவிளையாட்டுப்பாடலாயிருந்தும்,அதன் தத்துவம்,மகத்துவம்,கோட்பாட்டை சித்தகுமாரன் நூலைப்படித்ததும் அறிந்துகொண்டேன்.அதுபற்றியசிந்தனை சதா என்னுள் அலைமோதத்தொடங்கியது.இதுவே என்கண்ணைத்திறந்தது எனலாம்.

இந்தச்சிறியபாடலின் பெரியகருத்து யாதென பார்ப்போம். தம்பலம் எனப்படும்,இந்தப்பூமியானது 24000மைல் சுற்றளவுள்ள ஒருகோளாகும்.ஆகாயம் எனும் இந்தப்பரந்தவெளியில், எதுவிதஆதாரமுமின்றி மணிக்கு 1000மைல் வேகத்தில் அந்தரத்தில் தன்னைத்தான் சுற்றியும்,மணிக்கு 72000 மைல் வேகத்தில் சூரியனின் ஆட்சிவட்டத்தை(ஓர்பிட்)சுற்றியும் சுழன்று வருகிறது.தன்னைத்தான் சுற்ற 24மணிநேரத்தையும்(1நாள்) சூரியனைச்சுற்றிவர 365நாட்களையும் எடுப்பதாக வானசாத்திரம் கூறுகின்றது.இதனை கற்பனைசெய்து பார்த்தால் ஒரு மாபெரும் ரங்கராட்டினம் ஊழிக்காலவேகத்தில் அந்தரத்தில் ஒருவிதஆதாரமுமின்றி தன்னைத்தான் சுற்றியும்,சூரியனைச் சுற்றியும் வரும் வினோதத்தைப் பார்க்கமுடியும்.இத்தகைய பூமி எனும் தம்பலத்தில் நிலம்,நீர்,நீராவி–வளிமண்டலமும் சூழ்ந்திருக்கிறது.இப்பூமியிலுள்ளவை யாவும் நிலைகுலையாது,அழுக்குலையாது அற்புதநிலையில் ஆடிவரும் தம்பலத்தில் கண்ணுக்குத்தெரியாத கிருமி தொடக்கம்,காட்டுயானை, திமிங்கிலம் வரையான நில,நீர்வாழ்வன யாவும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன.இவற்றின் சுவாசம் எனும் மூச்சு,கீச்சு!கீச்சு எனும் சத்தத்துடனேயே ஆரம்பிக்கிறதாம்.இவ்விதம் சகல சத்தத்தையும் மனச்செவியால் செவிமடுத்தால் அவை கீயோ!மாயோ!என ஒலிப்பதைக் காணலாம்.இவை அனைத்தும் தம்கடைசிக்கால மரணத்தறுவாயில் மாச்சு!மாச்சு!எனும் அந்திம மூச்சாகிய சேடம்இழுத்து,அழிந்து போவதே வாழ்வின் நியதியாகும். கீச்சு!கீச்சு என ஆரம்பமாகும் வாழ்வு,கீயோ,மாயோ என ஒலித்து மாச்சு,மாச்சு என முடிகிறதை இப்பாடல் காட்டுகிறது.இந்த உலக வாழ்வின் இயற்கைத்தத்துவத்தை நம்முன்னோர் போதித்திருக்கிறார்கள்.இந்த மண்விளையாட்டை ஆராய்ந்தால்,அருவநிலையிலிருந்த ஆத்மா, உடலோடு சங்கமித்து கீச்சு, கீச்சு என ஆரம்பித்து,கீயோ,மாயோ என சத்தமிட்டுவாழ்ந்து ,மாச்சு, மாச்சு என மூச்சிழுத்து மாயமாக மறைந்துவிடும்.இந்தவாழ்வில் காரணமின்றி,காரியமில்லை என்பதற்கிணங்க,இவ்விளையாட்டில் ஒரு காரணம் ஒளித்திருப்பதாகவும்,அதற்கு குச்சி உதாரணமாகவும்,அதனை மற்றவர் மண்ணுக்குள் ஒளிந்திருக்குமிடத்தை மனதால் கணித்து,தனது இருகைகளாலும் பொத்தவேண்டும்.அதிர்ஸ்டவசமாக அக்குச்சி அவர் கைக்கு அகப்பட்டால் அவர் அவ்விளையாட்டில் வெற்றியடைந்தவராவாராம். குச்சியை கண்டுபிடிக்கத்தவறின் அம்மண்ணை அவர்கையில் நிரப்பி அவர் பிடிக்கத்தவறிய குச்சியை அதில் நட்டு,அவர் கண்களை மற்றவர் கைகளால் பொத்திக்கொண்டு எவடம்?எவடம்? புளியடி!புளியடி! என அக்குச்சியை தேடுவதாகவும் பாவனை செய்கிறார்கள்.அதாவது குச்சியை கையில் வைத்துக் கொண்டே அதனை கண்டுகொள்ளாது தேடுவதாக அர்த்தமுடையது. அதாவது நமக்குள் உள்ள ஜீவாத்மாவை கண்டுகொள்ளமுடியாது, எவடம்?எவடம்?என தேடுவதை குறிக்கும் அர்த்தமுள்ளவிளையாட்டாகும்.இதற்கு இடைக்காட்டுச்சித்தர் கொடுத்தவிளக்கம் யாதெனில் அகரமாக அருவநிலையில் நின்ற ஆத்மா,,உகரமாக உயிரும்,உடலுமாக உருவெடுத்து,திரும்பவும் ஊமைநாதமாக –ம்–எனும் அழிவு நிலையையெய்தி அகரமான,அருவநிலையைஅடைகிறது என்பதாகும். இப்படியாக படைத்தல்,காத்தல்,அழித்தல் ஆகிய முத்தொழிலையும் குறிக்கும்,அ–உ.–ம் எனும் மூன்றுநாதங்களின் சங்கமஒலியே ஓம்! எனும் பிரணவநாதமாகும் என விளக்கியுள்ளார்.இப்படி தோற்றமும் முடிவுமாகநிற்கும் அகரத்தையே அகரமுதல எழுத்தெலாம் ஆதி பகவன் முதற்றே உலகு–என வள்ளுவர் கூறியுள்ளார்.

முத்தொழிலையும் புரியும் பிரணவ நாதத்தின் உட்பொருளை தெரிந்து கொள்ளவே இந்த மண்விளையாட்டு போதிக்கப்பட்டது.இத்தகைய தத்துவகருத்துக்களை மேலும் ஆராய முற்பட்டேன்.மனிதவாழ்வின் உட்பொருளை எவ்வளவு சுலபமாக அறியக்கூடியதாக இந்த குச்சி விளையாட்டை நமது முன்னோர் எடுத்துக்காட்டினர் என உணர்ந்தேன்.நமது முன்னோரால் அரும்பாடுபட்டு தேடப்பட்ட இத்தகைய கருத்துகள்,தத்துவங்கட்கு பொருள் காண வேண்டுமென்பது என் ஆசையாகும்.அவற்றை எல்லாம் ஆராய்ந்து நிரைப்படுத்தி,ஓர் நூல் வடிவில் வெளியிடவேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று.

முன்பு கற்றவற்றை மீளவும் ஆராய்ந்து உட்பொருளை அறியமுற்பட்டேன்.இதனால் பிரபஞ்சஉற்பத்தி அங்காதிபாதம் போன்றநூல்களை மீளவும் கற்கவேண்டியதாயிற்று.

இதனால் பிரபஞ்சதோற்றம் பற்றிய சிந்தனை என்னுள் வலுத்தது.

அது சிந்தனை,மனம் போன்றவற்றை பற்றியும் அறியத்தூண்டியது. மனிதன் பிறக்கையில் உடல்,உயிர், ஐம்புலன்களுடன் நடமாடதேவையான அங்கங்களுடனும் பிறக்கிறான்.மற்றசீவராசிகளிடம் இல்லாத ஒருஅம்சம் மனிதர்களிடம் இருக்கிறது.அது சிந்திக்கும் திறனாற்றலாகும்.இதை மனம்,புத்தி,சித்தம், அகங்காரம்,எனும் மனத்தொகுப்பு என்பர். இதை அகம் அல்லது உள்ளம் எனலாம்.மனிதன் பிறக்கும் போது வெற்றுக்கடதாசிபோல் உள்ளம்,வெள்ளையான பரிசுத்தமாகவே இருக்கிறது (வளரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொன். சிவா
எகர்சுண்ட், நோர்வே

# "அரும்புகள்"

(சிறுகதை)

"என்ன வசந்தா இன்னும் வெளிக்கிடேல்லையே நாலு மணியாகுது கெதியா வெளிக்கிடும் பிள்ளை அனுஷா எங்க சனமெல்லாம் போட்டுது நாங்க தான் கடைசிபோல இருக்கு" என்று மனைவியை அவரசப்படுத்தினான் ஜெகன். "கொஞ்சம் பொறுங்கோ எல்லாத்தையும் நான் ஒரு கையால எப்பிடிச் செய்யிறது" பதிலுக்குப் பேசினாள் வசந்தா. அவசர அவசரமாகப் புறப்பட்டு நடந்துகொண்டிருந்தார்கள் அவர்கள். வழியில் சீலனையும் அவன் குடும்பத்தினரையும் சந்தித்தனர் அவர்களுடன் சேர்ந்து நடந்தனர். எதிரே நடேசலிங்கம் வந்துகொண்டிருந்தார் "எங்க இவ்வளவு அவசரமா எல்லாரும் போறியள் ஏதாவது கொண்டாட்டமோ? எனக் கேட்டார் அவர். "இல்லை ... இன்டைக்கு எங்கட நாட்டில எடுத்த படம் போடுகினம் அதுதான் பாக்கப் போறம் நீங்க போகயில்லையே? எனக்கேட்டான் ஜெகன். "நாட்டில எடுத்த படமோ" என ஏளனமாகச் சிரித்த அவர் "நானும் படம்தான் எடுத்துக்கொண்டு வாறன் பாக்க" என்றபடியே தனது கையிலிருந்த இந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் இரண்டைக் காட்டினார். அவரது ஏளனச் சிரிப்பு ஜெகனுக்கும் சீலனுக்கும் எரிச்சலை மூட்டியது. என்றைக்காவது ஒருநாள் எங்கட நாட்டில எடுத்த படங்களை நீங்களாகவே தேடிப்பார்க்கிற நிலமை வரும் அப்ப புரியும் உங்களுக்கு என மனதினுள் நினைத்துக்கொண்ட ஜெகன் "சரியண்ணை எங்களுக்கு நேரமாகுது நாங்கள் வாறம்" என்றபடியே நடக்கத்தொடங்கினார்கள்.

எங்கள் நாட்டிலே எடுத்த அந்தப் படத்தை நேற்றுப் பார்த்ததுமுதல் ஏதோ ஒரு சொல்லமுடியாத வேதனை ஜெகனின் மனதைப் பற்றிக் கொண்டது. எத்தனை கொடுமையான சம்பவங்கள் நாட்டிலே நடக்கும் அனர்த்தங்களை நேரில் பார்த்தது போன்ற ஒரு உணர்வு அவனுக்கு. வசந்தாவிடமும் அடிக்கடி அந்தப் படத்தைப்பற்றியே பேசிக்கொண்டான். மளிகைச்சாமான்கள் வாங்குவதற்காக கடைக்குச் சென்றான் அவன். "என்ன ஜெகன் முகத்தில ஒரே வாட்டமா இருக்கு தலையைக் குனிஞ்சுகொண்டு வாறீர் ஏதாவது பிரச்சினையோ? நேற்று படம் எப்பிடிப் போச்சுது பார்க்கக் கூடிய படமோ?" என்று கேட்டவாறே வந்தார் நடேசலிங்கம். "ஒரு பிரச்சினையுமில்லை நேற்றுப் பார்த்த அந்தப் படத்தைப் பற்றித்தான் யோசிச்சுக்கொண்ட வந்தனான்" ஜெகன் சொன்னான். "என்ன இருந்தாலும் இந்தியப் படங்களைப்போல வராது சலிப்பில்லாமல். பார்த்துக் கொண்டிருக்கலாம். நல்ல பாட்டுகள், சண்டைகள்" என்று அவர் நேற்றுப் பார்த்த படங்களைப்பற்றி அளந்து கொண்டே போனார். அதைக்கேட்க ஜெகனுக்கு அவர்மேல் வெறுப்பாக இருந்தது. "உங்களைப்போல பலர் எங்கட சமுதாயத்தில இருக்கிறதாலதான் அண்ணை எங்கட கலை, கலாச்சாரமெல்லாம் அழிஞ்சுபோகுது. முதலில நாங்க எங்கட கலை, கலாச்சாரத்தை மதிக்கவேணும். பார்க்கக்கூடிய படமா என்று கேட்டீங்களே இது ஒன்றும் நீங்க பார்க்கிற படங்களைப்போல பொழுது போக்கிற்காகவோ, வருமானத்திற்காகவோ, அரசியலை வைத்தோ எடுத்த படமில்லை. உண்மையிலேயே எங்கட தாய்நாட்டில ( தமிழீழத்தில) அன்றாடம் நடக்கிற கொடுமையான சம்பவங்களையும் அதால எங்கட மக்கள் படுகிற அவலங்களையும் வைத்து உணர்ச்சி பூர்வமான கதையையும் வைத்து எடுத்த படம். அதைப்பாக்க எவ்வளவு மனதுக்கு வேதனையா இருக்குத் தெரியுமே! அதெல்லாம் சொன்னால் புரியாது. நீங்க விரும்பினா அடுத்த சனிக்கிழமையும் ஒருபடம் இருக்கு வந்து பாருங்கோ அப்ப உங்களுக்குத் தெரியும். இந்தியத் திரைப்படங்களைப் பற்றிப் பெரிசா அளந்தியளே அவர்கள்கூட ஒரு காலத்தில சிறிதாக இருந்துதான் இன்றைக்கு வளர்ந்துள்ளார்கள். அவர்களுடன் எங்க நாட்டுப் படத்தையும், பாடல்களையும் இப்ப ஒப்பிட்டுப்பார்க்க முடியுமா? இந்தியத் திரைப்படத் துறையினரை நான் குற்றம் சொல்லல்ல. நாங்க எங்கட கலையை முதலில மதிக்கத் தெரியவேணும் அதனாலதான் சொல்றேன்" என்று சொல்லி முடித்தான் ஜெகன். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த நடேசலிங்கம் "பாப்பம் வசதியெண்டா நேரம் கிடைச்சா சனிக்கிழமை வந்து பாப்பம் எப்பிடி இருக்கெண்டு" என்றவாறே போனார்.

நாட்கள் நகர்ந்தன வழமைபோல சனிக்கிழமையன்று ஈழத்திலே தயாரிக்கப்பட்ட அந்தப் படத்தினைப்பார்க்க எல்லோரும் கூடினர். நடேசலிங்கம் சொன்னபடியே இன்று வந்திருக்கிறாரா என்று சுற்றுமுற்றும் பார்த்தான் ஜெகன் ஆனால் அங்கே அவர் இல்லை. அவர்களெல்லாம் ஏன் வரப்போகிறார்கள் பொழுது போக்குவதற்குத்தான் சினிமாப் படங்கள் இருக்கே. எமது நாட்டில் என்ன நடந்தாலென்ன யார் அழிந்தாலென்ன அதைப்பற்றி ஏன் கவலைப்படப் போகிறார்கள். நாம் தப்பிவிட்டோம் என்றுதானே நினைக்கிறார்கள். என்று பெருமூச்சு விட்டவாறே இருக்கையில் அமர்ந்தான். வழமைபோல வசந்தாவும், அனுஷாவும் சீலன் குடும்பத்தினருடன் போய் உட்கார்ந்து கொண்டனர். " என்ன ஜெகன் ஆரையோ எதிர்பார்க்கிற மாதிரி இருக்கு" அவன் அருகிலே இருந்த நடேசலிங்கம் கேட்டார். மின்னல் வேகத்தில் திரும்பிய ஜெகன் "எட நீங்கள் வந்திட்டியளே உங்களைத்தான் பார்த்தனான் எனக்கு முந்தி வந்திட்டியள்போல" என்றான். "வீட்டில சும்மாதானே நிக்கிறன் பொழுது போகயில்லை அதுதான் படத்தைப் பாப்பமெண்டு வந்திட்டன்" இது நடேசலிங்கத்தார். மண்டபத்தினுள் இருந்த மின்விளக்குகள் அணைந்தன முன்னாலிருந்த அந்தச் சிறிய திரையில் படத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### சுவாமியைச் சூழ்ந்த திருக்கூட்டம்


நெடுந் தூரத்திலிருந்து வரும் யாத்திரிகர்களும், தினம் வரும் அயல் பக்தர்களும் ஆசானின் திருவடியின் கீழ் ஒன்று கூடி அங்கு விரிக்கப்பட்டுள்ள பாய் மீது அமர்ந்திருப்பர். பொதுவாக அவரது ஆச்சிரமத்துக்கு மாலை நேரத்திலேயே பக்தர்கள் வந்தனர். சைவ மார்க்கம் பற்றியும், பண்டைக்கால முனிவர்கள் ஞானிகள் பற்றியும், வேதாந்த, சித்தாந்த தத்துவத்தின் தனது கோட்பாடு பற்றியும் அவர் பேசுவார். ஆசானும் அடியவர்களுமாகப் பக்திப் பாடல்களைப் பாடுவர். தனது மென்மையான உயிரை உருக்கும் குரலில் அவர் பாடுவார். ஆழ்ந்த விஷயங்கள் குறித்தும் உலகியல் விஷயங்கள் குறித்தும் சுவாமிகள் பேசுவார். அல்லது அடியவர்களுடன் மௌனத்தில் ஆழ்ந்திருப்பார். தன்னிடம் வருபவர்களுக்கு எல்லாம் சனாதன தர்மத்தின் அழியாத உண்மைகளை யோகசுவாமிகள் வலியுறுத்தி வந்தார். அடியவர்களுக்கு அவர் வழங்கிய கட்டளைகள் நபருக்கு நபர் மாறுபடும். பொதுவான ஒரு பரிகாரத்தை அவர் தருவதில்லை. யாருக்கு எது தேவையோ அதைத் துல்லியமாக அருளினார். ஒருவருக்கு யோக சாதனையை வழங்குவார். மற்றவருக்கு பக்தியையும், உபாசனையையும் கற்பிப்பார். வியாதிக்கு ஏற்ற மருந்து என்று சுவாமிகள் கூறுவதுண்டு. யோகசுவாமிகள் அடியவர்கள் சகிதம் பலமுறை இந்தியாவிற்கு திருத்தல யாத்திரைகளையும் மேற்கொண்டிருந்தார்.

### சிவதொண்டு, சிவத் தியானம்

வெள்ளை வேட்டியும் சால்வையும் மட்டுமே யோகசுவாமிகள் அணிந்திருப்பார். உயர்ந்த தோற்றமும் ஆரோக்கியமான திருமேனியுமுடைய யோகசுவாமிகள் யாழ்ப்பாணத்து வீதிகள் வழியாகவும் வயல் வெளிகளினூடாகவும் தினமும் பல மைல்கள் தூரம் நடப்பார். தனது வெண்மையான தாடியும் தலைமுடியும் சூரிய ஒளியில் பிரகாசிக்க, கறுப்புக் குடையுடன் சுவாமிகள் யாழ் குடாநாட்டு வீதிகளிலே கம்பீர நடையுடன் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். தினமும் சூரிய உதயத்துக்கு முன் எழுந்து தனது குடிசையில் திருவடி வழிபாடு செய்வார். தனது கைலாச பரம்பரையில் வந்த ஏனைய சற்குருமாரைப் போன்றே யோகசுவாமிகளும் ஒரு யோகியும், சித்தருமாவார். பல ஆண்டுகளின் தீவிர ஆன்மீக சாதனை அவருக்குப் பல அக ஆற்றல்களை எழுப்பியிருந்தன. ஆயினும் யோகசுவாமிகள் அவை பற்றிப் பேச மாட்டார். தன்னைக் காண வருபவர்களை அவர்கள் வருவதற்கு முன்னமே சுவாமிகள் அறிந்திருந்தார் எனவும், அவர்கள் பேசுவதற்கு முன்னுலேயே அவர்களின் எண்ணங்களை அறிந்திருந்தார் எனவும் அவரது சீடர்கள் கண்டனர். அவரது அகக் காட்சியில் இருந்து எதையும் மறைக்க முடியவில்லை. தனது வாழ்வின் பிற்பகுதியில் அவர் அகநிலைகளில் மேலும் விழிப்புணர்வு மிக்கவராய் இருந்ததோடு, தனது பக்தர்கள் முன்னிலையிலேயே அகவுலகங்களில் தேவர்களோடும் பேசி வந்தார். பல மேலைத் தேசத்தவர்கள் கூட சுவாமிகளைத் தரிசிக்க வந்தனர். அடியவர் வாழ்வில் யோகசுவாமிகள் புரிந்த அற்புதங்களோ ஏராளம். பிற் காலத்தில் இந்த அற்புத நிகழ்ச்சிகள் பல மொழிகளிலும், நூல்களாக அடியவர்களினுல் வெளியிடப்பட்டுள்ளன.



### நற்சிந்தனை என்னும் நல்லமுதம்



பல அழகான பாடல்களை யோகசுவாமிகள் தனது வாழ்நாளில் பாடியருளினுர்கள். அவை அவர் அகத்திலிருந்தே வெளிவந்தன. பின்னர் இவை ஒன்றாக திரட்டப்பட்டு நற்சிந்தனை என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. உள்ளத்தை உருக்கும் நற்சிந்தனைப் பாடல்கள் பல ஒலிப்பதிவு நாடாக்களாகவும் வெளிவந்துள்ளன. 1935ம் ஆண்டு சில பக்தர்களைக் கொண்டு சிவதொண்டன் என்னும் மாதாந்த சமய பத்திரிகையை வெளிவருமாறு செய்தார். 1953ம் ஆண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் சிவ தொண்டன் நிலையம் என்னும் ஆன்மீக நிலையத்தை நிறுவினுர். சுவாமிகளின் விருப்பத்தின்படி பின்னர் மட்டக்களப்பிலும் ஓர் சிவதொண்டன் நிலையம் நிறுவப்பட்டது. இன்று லண்டன் நகரிலும் சிவ தொண்டன் நிலையம் சிறப்புறப் பணியாற்றுகிறது. சைவ சமயத்தை மேலைத் தேசங்களில் பரப்புவது பற்றியும், கிழக்கு - மேற்கு இடையே ஒரு பாலம் அமைப்பது குறித்தும் யோகசுவாமிகள் அடிக்கடி கூறிவந்தார். இன்று சைவ சமயம் மேலைத் தேசங்களில் வேரூன்றி இருப்பதற்கு வித்திட்டவர் நமது யோகசுவாமிகள். அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலே தனிப் பெரும் முனிவராக அருளாட்சி புரிந்து வந்த யோகசுவாமிகள் 1964ம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் தனது 91 வது வயதில் மகாசமாதி அடைந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கைலாச பரம்பரையின் இன்றைய சற்குரு

யோகசுவாமிகளின் கொழும்புத்துறைக் கொட்டிலுக்கு 1949 ஆம் ஆண்டு வைகாசி பௌர்ணமி தினத்தன்று ஓர் அமெரிக்க இளைஞர் வந்தார். அவரின் வருகையை எதிர்பார்த்திருந்த யோகசுவாமிகள் அவருக்கு சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார். ஆம்! அவரே நமது குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள். யோகசுவாமிகள் குருதேவருக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து, அவரின் வாழ்வின் பணிகள் குறித்து சக்தி வாய்ந்த அறிவுரைகளையும் வழங்கினர். யோகசுவாமிகள் குருதேவரின் முதுகில் ஓங்கிப் பலமாக அடித்து இது அமெரிக்காவிலே கேட்கும் இனி உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சிப்பாய், நீ பல ஆலயங்களை அமைத்துப் பலருக்கு உணவளிப்பாய் என்று ஆசி வழங்கினர். இந்த அடி குருதேவரை நாதசித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக அமைந்தது. உள்ளூர் பக்தர்கள் இந்த அரிய நிகழ்ச்சியை ஒரு முடிசூட்டு விழா என்று கூறி மகிழ்ந்தனர். அப்போது குருதேவருக்கு வயதோ இருபத்தியிரண்டு, யோகசுவாமிகளுக்கு வயதோ எழுபத்தியேழு.

குருதேவர் இலங்கையில் இருந்த காலத்தில் யோகசுவாமிகளின் ஆசியுடன் அளவெட்டி என்னும் கிராமத்தில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை நிறுவினர். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி வரும் சைவ சித்தாந்த தர்மசபை இங்கு தான் ஆரம்பமாகியது. சற்குருவின் ஆணைப்படி குருதேவர் அமெரிக்காவுக்குத் திரும்பி வந்து, ஏழு ஆண்டுகள் தான் செய்ய வேண்டிய பணிகளுக்குத் தன்னை ஆயத்தமாக்கும் சாதனைகளில் ஈடுபட்டார். தினசரி சாதனையாலும் ஆழ்ந்த தியானத்தாலும் ஞான திருஷ்டி, ஞான தரிசனம், ஞான ஒளி ஆகிய அக ஆற்றல்கள் குருதேவருக்கு வெளிப்பட்டன. 1957 ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் குருதேவர் இமாலய கலாக்ஷேத்திரத்தை நிறுவி கலிபோனியாவில் அமெரிக்காவின் முதலாவது இந்துக் கோயிலையும் திறந்து வைத்தார். கிழக்கிற்கும் மேற்கிற்கும் மையமாக விளங்கும் ஹாவாய் தீவுகளில் ஒன்றான குவை எனும் தீவில் புனித வைலுவ நதிக் கரையில் 1970 ஆம் ஆண்டு குருதேவர் சைவ சித்தாந்தத் தர்மசபையின் தலைமைப் பீடமாகிய குவை ஆதீனத்தை நிறுவினர். குருதேவர் இந்த ஆதீனத்தில் கடவுள் இந்து கோயிலை ஸ்தாபித்து ஆறடி உயரமான சிவ நடராஜர் மூர்த்தியை பிரதிஷ்டை செய்தார். இக் கோயிலே அமெரிக்காவிலும் மேலைத் தேசங்களிலும் நிறுவப்பட்ட முதலாவது சிவன் கோயிலாகும். குவை ஆதீனத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் சிறு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஓர் உருத்திராட்ச மரச்சோலையும் உள்ளது. குருதேவருக்கு 1975 ம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் ஓர் அகக்காட்சி அருளினர். இந்த அகக்காட்சியின்படி புனித வைலுவ நதிக்கரையில் ஓர் சுயம்புலிங்கத்தை குருதேவர் கண்டார். இச் சுயம்புலிங்கத்தை மையமாகக் கொண்டு மேலைத்தேசங்களின் முதலாவது கருங்கற்களினுல் ஆகம விதிப்படியமைந்த கோயிலாக சன்மார்க்க இறைவன் கோயில் உருவாகி வருகின்றது. இங்கு உலகின் மிகப் பெரிய ஸ்படிகலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

1979 ம் ஆண்டு குருதேவர் **HINDUISM TODAY** எனும் சர்வதேச பத்திரிகையை நிறுவினர். இந்தப் பத்திரிகை உலகெங்கும் வாழும் இந்துக்களின் குரலாக சர்வதேச ரீதியில் ஒலிக்கின்றது. இதனைத் தவிர சனுதன தர்மம் பற்றிய குருதேவரின் போதனைகள் பல நூல் வடிவில் எமக்கு கிடைக்கின்றன. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் குருதேவரின் துறவிகள் அதி நவீன கொம்பியூட்டர்களின் துணையுடன் பல நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றனர். கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்காவிலும் மேலைத் தேசங்களிலும் பல இந்துக் கோயில்கள் உருவாகுவதற்கு குருதேவர் மூல காரணமாக இருந்துள்ளார். மேலைத் தேசங்களில் கோயில்களைக் கட்டி வரும் இந்து சமூகத்தினருக்கு ஆலோசனைகளை வழங்கியும் அவர்களின் கோயில்களுக்கு மூர்த்திகளை வழங்கியும் இடையிடை இந்த கோயில்களுக்கு நேரில் சென்றும் குருதேவர் அவர்களை வழிநடாத்தி வருகிருர். 1983ல் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தின் பின் குருதேவர் இலங்கைத் தமிழர் அகதி நிவாரண நிதி என ஓர் நிதியை உருவாக்கி அதன் மூலம் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியுள்ளார். 1986 ஆம் ஆண்டு புது டில்லியில் கூடிய உலக சமய பாராளுமன்றம் குருதேவரின் உலகளாவிய சமயப் பணியைப் பாராட்டி அவருக்கு ஜகதாச்சாரியர் என்ற விருதினை வழங்கியுள்ளது. இன்று குருதேவர் ஹாவாயில் தனது ஆதீனத்தில் துறவிகள் சகிதம் வாழ்ந்து வருகின்றுர். பல நாடுகளையும் பல இனங்களையும் சார்ந்த துறவிகள் தமது வாழ்க்கையை முற்றுகச் சிவப்பணிக்கென அர்ப்பணித்து குருதேவரின் வழிநடத்தலின் கீழ் சிவ தொண்டு புரிந்து வருகின்றனர். குருதேவர் சனுதன தர்மத்தின் ஆழ்ந்த கருத்துக்களை தொடர்ந்து பல நூல்களாக எழுதியும் தூய சைவ சித்தாந்தத்தை அடியவர்களுக்குப் போதித்தும் வருகிருர். அவர் எழுதிய **Dancing with Siva** எனும் புத்தகம் இந்து மதம் பற்றிய கேள்விகளுக்கு எல்லாம் விடையளிக்கிறது. தனது சற்குருவின் கட்டளைப்படி உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சித்து வருகின்றுர். குருதேவரின் தரிசனமும் அருளுரைகளும் உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்கள் மத்தியில் ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

*மேலதிகப் பிரதிகள் பின்வரும் முகவரியில் பெறலாம்.*

Kauai Aadheenam, 107 Kaholalele Road, Kapaa, Hawaii 96746 USA.

சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்க்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக! தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

www.tamilarangam.net



தில்லுமுல்லுபண்ணி அனுவுக்கு கட்டாயக் கலியாணம் செய்து வைச்சிட்டாங்க எண்டா?
எலிசபெத் மூளையைக் கசக்குவது அவளது அமைதியில் இருந்து புலப்பட்டது. இறுதியில் எந்த முடிவும் எடுக்கமுடியாதவளாய் வினாக்களை விடுவித்தாள்.
- என்னதான் செய்யலாம் எண்டு நினைக்கிறியள்?
- றியிஸ்ற்றர் பண்ண முடியாதா?
ம்.............இல்ல......முடியாது. உங்களுக்கு பதினெட்டாகேல்லேயே.

அனுவுக்கு அழுதுவிடுவேனோ எனப் பயமாக இருந்தது. அவளுக்கு இதற்கு விடை கிடைக்கும் என்பதுபோல் படவில்லை.
- அனு ! நாங்க லோவில்லாமல் ஏதும் செய்ய முடியாது. உனக்கு பதினெட்டு முடியிறவரைக்கும் நீ உன்ர அப்பா அம்மான்ர சொற்படிதான் நடக்கோணும். இப்போதைக்கு செய்யக்கூடியது என்னெண்டா நீ இந்த விசயத்தை மறந்திட்டது போல அமைதியா இருக்கிறதுதான். கலியாணம் கட்டிவைக்க றைபண்ணினா ஏதாவது சாட்டுச் சொல்லி பதினெட்டு வயசுவரையும் கடத்திக் கொண்டு வா. அதுக்குப்பிறகெண்டா சட்டப்படி நீ ஸ்தீக்கோட சேர்ந்து வாழ்றத யாராலும் தடுக்கேலாது. சோ, இனி எல்லாத்தையும் மறந்தமாதிரி நல்ல பிள்ளையா நீங்க நடிக்கோணும்.

கூறிக்கொண்டே எலிசபெத் அனுவின் கன்னத்தில் முத்தமிட்டாள். அனுவுக்கு இதைவிட வேறுவழி இருப்பதாய் புலப்படவில்லை. எலிசபெத்தின் புத்திமதி வெந்தபுண்ணிற்கு மருந்து போட்டது போல இதமாய் இருந்தது. நின்மதியாக எலிசபெத்திடமும் ஸ்தீக்கிடமும் விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டைநோக்கி நடந்தாள்.

## 11

வேலைவிட்டு வீட்டிற்கு வரும்போது மூன்றுமணி என்றாலும் இருட்டிவிட்டது. இலங்கையில் இரவு எட்டுமணிக்கு இருப்பது போன்று இங்கு மூன்றுமணிக்கே இருட்டிவிடுகின்றது. பனி கரைந்து பனிக்கானதால் நடக்க முடிவதில்லை. இந்தநேரங்களில் வண்டிஓட்டுவதும் பெரும் திண்டாட்டமாய்த்தான் இருக்கும். வேந்தன் வேலையால் வரும்போது வழியில் ஒருசிறுவன் துவிச்சக்கர வண்டிஒன்றை வைத்துக் கொண்டு அதை ஓட்டவும்முடியாதும், அதோடு நடக்கவும் முடியாதும், போராடியபோது பரிதாபமாய் இருந்தது. வாகனங்கள் முதலாவது கியரிலு வந்து நின்றாலும், தழும்பிவண்ணம்தான் நிற்கின்றன. இவையனைத்தும் அன்றாட நடைமுறையானாலும், வெளியே உள்ள இயற்கைக்கும் வேந்தனின் மனதிற்கும் ஒரு ஒற்றுமை இருந்தது. இரண்டுமே இருண்டிருந்தன.

இருளைக்கண்டால் துன்பத்திற்கறிகுறி என்றும் கூறலாம். ஒளியின் உதவி இல்லை என்றால் கண்களும் தெரிவதில்லை, பாதையும் புரிவதில்லை. இருளைக் கலைப்பதற்கு ஒளியைக் கொடுக்கும் சாதனம் வேண்டும். வேந்தனின் மனதை கவலை இருள் அடைத்துக் கொண்டிருந்தது. அந்த இருளைப் போக்கக்கூடிய ஒரே ஒருசாதனம் அனுவாய் இருந்தும் அந்த சாதனம் மகிழ்ச்சி ஒளியைத் தர மறுத்துவிட்டது. அனுவைச் சகோதரங்களிடம் இருந்து பிரித்து தனியே வாழவைப்பது வேந்தனுக்கு பெரும் கவலையைத் தந்தது. வேறுவழி இன்மையால் அதைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள்பட்டிருந்தான்.

அனு இங்கிருந்து செல்வது அவளின் வாழ்க்கைக்கு இருளைக் கொடுப்பதாயினும் எங்கள் குடும்பத்திற்கு ஒளியைத்தான் தருகின்றது. அவளின் ஒளிமயத்தைப் பார்த்தால் எங்கள் குடும்பமே நிரந்தர இருளில் இருக்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் படுவோம். பலரின் ஒளிமயமான வாழ்க்கைக்காக ஒருத்தி ஒளியை மறைப்பதும் ஒருவித உலக நியாயம்தானே? வேந்தனின் மனதில் ஒருமூலை அனுவின் காதலை ஏற்றுக் கொண்டாலும் சமுதாயத்தை எண்ணும்போது கேள்விக்குறியே விஸ்வரூபமாய்த் தெரிகிறது. மற்றப்பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணும்போது அது தாப்பெனவே படுகின்றது. எண்ணங்கள் முடிவதற்குமுன் விடு வந்து சேர்ந்துவிட்டார். காரை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு கடிதம் பார்ப்போமே என எண்ணியவன் .சீ தேவையில்லை., அன்னம் எடுத்திருப்பாள் என எண்ணத்தை மாற்றியவண்ணம் உள்ளே சென்றான். கடிதம் ஒன்று மேசையில் வைக்கப் பட்டிருந்தது.

சியாமிழிதான் கடிதத்தை எடுத்தவள். அப்பாவின் முகவரிக்கு வந்ததால் சம்பந்தி வீட்டுக் கடிதமாய் இருந்தும் பொறுமையாக அப்பாவுக்காக காத்திருந்தாள்.

கடிதத்தில் சம்பந்தி வீட்டு விலாசத்தைப் பார்க்கும்போது சந்தோஷம் தாங்கமுடியவில்லை. நல்ல முடிவொன்று வந்திருக்கும். சியாமிழியின் கலியாணக் கோலத்தை மிகவிரைவில் பார்த்துவிடலாம் என மனம் துள்ளிக்குதிக்க கடிதத்தைப் பிரித்தான் வேந்தன்.

31.10.91
மூளாய்.

கனம் வேந்தன் அவர்கட்கு!

நாங்கள் யாவரும் நலமுடன் உள்ளோம். அதுபோல் உங்கள் குடும்பமும் சேமமாய் வாழ இறைவனைப் பிராத்திக்கிறேன்.

மேலும் நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஏன் என்றால் சண்முகத்திற்கு இப்போது கலியாணம் வேண்டாம் என்று அடம்பிடிக்கிறான். அவன் விருப்பமே இதில் முக்கியம் என்பதால் என்னால் இதில் எதுவும் செய்ய இயலாது. மன்னிக்க வேண்டும். உங்கள் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்! கோபாலன் கடிதம் போட்டிருந்தான்.

வேறு அதிக புதினம் இல்லை. எனவே இத்துடன் முடிக்கிறேன்.

இப்படிக்கு,
வேலுப்பிள்ளை.

கடிதத்தை வாசித்து முடிக்கவும் சியாமிழி "என்னப்பா கடிதத்தில எழுதி இருக்காங்க?" என வினாவியவண்ணம் வரவும் சரியாய் இருந்தது.

இதை எப்படிச் சொல்வது என வேந்தனுக்குப் புரியாமல் திகைப்பு ஏற்பட்டது. கடிதத்தை அவளிடமே நீட்டினான். சியாமிழி கடிதத்தைப் படிக்கத் தொடங்கவும் அதற்குமேல் அங்கு நிற்பதற்கு மனமில்லாது குளியல் அறைக்குள் சென்று புகுந்து கொண்டான். குளித்துவிட்டு வேந்தன் வெளியே வரும்போதும் சியாமிழி அந்தக் கடிதத்தை திருப்பித் திருப்பி வாசித்துக் கொண்டிருந்தாள். வேந்தனுக்கு ஆச்சரியமாகவும் கவலையாகவும் இருந்தது.

- என்னம்மா இன்னமும் வாசிச்சுக் கொண்டிருக்கா? அதில என்ன அவ்வளவா எழுதி இருக்கு? ஒரு நாலுவரிதானே எழுதி இருக்கு?
- ஆனா பலவிசயம் இதில புதைஞ்சிருக்கப்பா?
வேந்தன் திடுக்கிட்டான். என்ன சொல்கிறாள் இவள்? மனதில் தோன்றிய கேள்வியை சொற்கணையாக்கினான்.
- என்னம்மா சொல்லுறா?
- அனுவப்பற்றி இங்க வேறயாருக்காவது தெரியுமா?
- ஏனம்மா கேக்கிறா?
சொல்லுங்கப்பா யாருக்காவது தெரியுமா?
சிறிது சிந்தித்தபின்பு,
- கோபாலனுக்குத் தெரியுமே.
- நான் நினைச்சது சரி. நீங்க அனுவப்பற்றி கோபாலனுக்கு சொல்ல அவர் அதை சம்பந்தி வீட்டுக்கு எழுதி இருக்கோணும்.
- என்னம்மா சொல்லுறா? கோபாலனுக்கு நான் சொல்லேல்ல. அவன் சொல்லித்தான் அனுவிடமே எனக்குத் தெரியும். ஆனா அவன் இத சம்பந்தி வீட்டுக்கு எழுதுவான் எண்டு நான் கனவிலேயும் நினைக்கேல்ல.
ம்.....................சரி அது இருக்கட்டும். நீ எதைவைச்சு இப்பிடிச்சொல்லுறா எண்டு சொல்லு முதல்ல.
- உங்க பிள்ளைகள் என்ன செய்யிறார்கள் எண்ட இடத்தில இருக்கிற விறிப்புக்குறிக்கு என்னப்பா அர்த்தம்? அது சாதரணமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விருப்புக் குறிக்கு ஏத்த இடமில்லையே ? அதில சாதாரணமா கேள்விக் குறிதானே வந்திருக்கோனும்? இதெல்லாம் அவைக்கு நிச்சயம் தெரிஞ்ச ஒண்டுதான். சோ அனுவிடயம் தெரிஞ்சதாலதான் அப்பிடி போட்டிருக்கோனும். அதோட அவையால கோபாலன் எழுதினதையும் காட்டிக் குடுக்காமல் இருக்கத் தெரியேல்ல?

மகள் கூறுவதில் ஆதாரபூர்வமான உண்மை இருப்பதை வேந்தன் புரிந்து கொண்டான். இதற்கு யார்மீது கோவப்படுவது என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. கோபாலன் மீதா ? அல்லது அனு மீதா? அல்லது சம்பந்திவீட்டார் மீதா ? அல்லது இங்கு பிள்ளைகளை வரவழைத்து சுதந்திரமான சமுகத்துடன் பழகவிட்டு , அதனால் காதல் ஏற்படவும் , துணிவு ஏற்படவும் வழிசெய்து , அதைஇப்போது ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் என்மீதா? எதுவும் புரியாமல் போனபோது இவர்களை இங்கு வரவழைத்தது தப்போ என்கின்ற கேள்வியும் சேர்ந்து அவன் மனதை வாட்டத் தொடங்கியது.

கட்டுப்பாடுகள் இல்லாத சுகந்திரமான இந்தச் சமுதாயத்தில் ஒவ்வொரு இளைஞர்களும், தங்கள் வாழ்க்கையை சுதந்திரமாய் அனுபவிப்பதை பார்க்கும்போது இவர்களுக்கும் அந்த ஆசை வரத்தானே செய்யும்? அந்த ஆசைகளை யாரலும் தவிர்த்து நிறுத்திக்கொள்ள முடியுமா? அல்லது அதைத் தப்பென முழுமையாய்ப் புறக்கணித்து நாம் ஒதுக்கி விட முடியுமா? அல்லது ஏற்றுக் கொண்டு குதுகலிக்கத்தான் முடியுமா? இதற்கு என்னதான் விடை?

சிந்தனையைக் கலைத்தது சியாமிழியின் குரல்.

- அப்பா?
- என்னம்மா?
- நீங்க கவலைப்படாதீங்க அப்பா. இந்த இடமில்லாட்டி இன்னொரு இடமப்பா. நான் இப்பிடி நடக்குமெண்டு எதிர்பாத்தனப்பா. என்மனசுக்க ஏதோ அப்பிடியொரு அவநம்பிக்க இருந்திச்சப்பா. எல்லாம் நல்லதத்தான் முடியும் . நீங்க கவலப்படாதீங்க.

சியாமிழியைப் பாக்கும்போது பெருமையாக இருந்தது. வளர்ந்துவரும் பிள்ளைகளுக்கே வயதுக்குமீறிய அறிவெனப்பட்டது. ஓ என்னைப்பற்றியும் வாழ்கையைப்பற்றியும் இவள் எவ்வளவு புரிந்து வைத்துள்ளாள்? வேந்தன் தனது ஆதரவுகலந்த அனுதாபப் பார்வையொன்றை அவள்மீது வீசிவிட்டு அடுக்களையை நோக்கிச் சென்றான்.

சியாமிழி எப்படித்தான் அப்பாவிற்குப் புத்திமதி கூறினாலும் தன்மனதிலும் கவலை ஒட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். அவளுக்கும் இந்தச் சமுதாயத்தின்மீது கோபம் உண்டாகியது. சின்னஞ்சிறிசாய் உள்ள என்தங்கை தனக்குப் பிடித்தவன்மேல் மையல் கொண்டதற்காய் எங்கள் குடும்பத்திற்கும் , எனக்கும் சேர்த்து தண்டனை வழங்குவது எவ்வளவு கொடுமையானது? ஒரு தனிமனிதனுக்கு தனக்குப்பிடித்ததென ஆசைகள் உணர்ச்சிகள் இருக்கக்கூடாதா? ஏன் இவர்களால் ஒரு தனிமனிதனின் உணர்ச்சிகள், ஆசைகள் , விருப்பு வெறுப்புகளை , மதிக்கத் தெரியவில்லை? ஒரு தனிமனிதனுக்கு கிடைக்க வேண்டிய சாதாரண இன்பங்களையே ஏன் இந்தச் சமுதாயம் தடை செய்கிறது? இது நியாயமானதா? இல்லை. ஒருபோதும் இல்லை. எவனோ ஆக்கிவைத்த பிளவுகளை காட்டி தனிமனித இன்பங்களைப் பறிப்பது ஒருபோதும் நியாயமாகாது. இந்தவகையில் இன்னாட்டினர் உயர்ந்தவர்கள்தானே? இங்கும் தங்களுக்குள் முழுமையாக பிளவு பார்க்காவிட்டாலும் தங்களுக்கும் எங்களுக்கும் இடையில் பிளவுபார்க்கும் விதத்தை எதற்குள் சேர்த்துக் கொள்வது? நிறத்தைக்காட்டி பிரிப்பவர்களை என்னவென்று கூறுவது? சீ இவர்களிலும் மட்டமானவர்களும் உண்டுதானே? சியாமிழி உணர்ச்சிவசப் பட்டிருக்க வேண்டும். சற்றுநேரம் கண்ணைமூடித் தியானித்தாள்.
அவள் வாழ்கையிலும் முதல்முதல் திருப்தி இன்மையை அனுபவிக்கத் தொடங்கி இருந்தமை வேதனையான அனுபவமாய் இருந்தது. வெறுப்பு அவள்மனதை அடைத்துக்கொள்ள வேதனையோடு படுக்கையில் விழ்ந்தாள்.

தொலைக்காட்சியில் இயற்கை என்னும் தலைப்பில் விலங்குகள், பறவைகள், போன்றவற்றின் வாழ்கை, அவற்றிற்கிடையேயான உணவுச்சங்கிலி அமைப்பு போன்றன ஒரு நிகழ்ச்சியாய்ப் போய்க் கொண்டிருந்தது. அனுவிற்கு இந்த நிகழ்ச்சி உள்ளக் கவலைகளைக் கூட்டுவது போன்றிருந்தது. எழுந்திருக்க விருப்பம் இல்லாது போக அவள் கண்கள் நிகழ்ச்சியைப் பார்த்தாலும் மனம்மாத்திரம் எங்கோ அலைந்து கொண்டிருந்தது. ஏன் இந்த மனிதர்கள் இப்படி இருக்கிறார்கள் எனக் கேள்வி கேக்க வைத்தது.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் காட்டப்பட்ட பறவைகளும் அவற்றின் வாழ்கை முறைகளும் அவளின் மனதை மிகவும் பாதித்திருந்தன. என்ன பெயர் அந்தப்பறவைக்கு என்பதை ஆரம்பத்தில் கேள்கத் தவறிவிட்டாள். அதன் பெயர் தெரியாமல் இருப்பதற்கு இப்பறவையை இலங்கையில் பார்த்திருக்கவில்லை என்பதும் ஒரு காரணம் எனக் கூறலாம். ஆபிரிக்காவில் வாழ்கின்ற பறவை அது. அதையும் அதன் வாழ்கையையும் அற்புதமாக இந்த ஐரோப்பியர்கள் படமாக்கி இருந்தனர். அவற்றின் வாழ்கை அனுவை மிகவும் கவர்ந்தது. வெள்ளை உடல்மீது கறுப்புக் கோடிட்டு இருக்கும் இந்தப் பறவைக்குத்தான் எவ்வளவு சுதந்திரம்? எவ்வளவு காதல்? எவ்வளவு பாசத்தோடும் , எவ்வளவு புரிந்துணர்வோடும் பழகுகின்றன? இவற்றை கட்டுப்படுத்த யார் உள்ளார்? எவரால் கட்டுப்படுத்த முடியும்? கறுப்பு பறவையை வெள்ளைப் பறவை காதலித்தால் என்ன ? வெள்ளைப் பறவையை கறுப்புப் பறவை காதலித்தால் என்ன? யாரை யார் காதலித்தாலும் இங்கு எவரும் தடைபோடப் போவதில்லை. பருவம் வந்தபின்பும் பகல்கனவு காணவேண்டிய அவசியம் இவர்களுக்கு இல்லை. ஆண்பெண் கூடலை பாவம் என்பவரும் இல்லை. தடுப்பவரும் இல்லை.

யாதி இல்லாமல் , குலமில்லாமல் ,கோத்திரம் இல்லாமல் , கூட்டமாய் வாழ்கின்ற பறவைச் சமுதாயத்தால் சுதந்திரமாய் இன்பமாய் வாழமுடிகிறது. ஐந்தறிவு படைத்த பறவையால் அமைத்துக் கொண்ட சமுதாயத்தை , நின்மதியை , ஆறறிவு படைத்த மனிதனால் செய்ய முடியவில்லையே ? ஆறாவது அறிவு பகுத்தறிவாய் இருந்தும் மனிதன் அதை பகுத்தறியப் பயன் படுத்தவில்லை. வகுப்பதற்கும் , பிரிப்பதற்கும் பயன்படுத்தி விட்டான். சாதி , மதம் , குலம் கோத்திரம் எவ்வளவு பிரிவுகள் மனிதனுக்குள்ளே? மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் தாய்வயிற்றில் இருந்து சுதந்திரம் பெறுவதாய் எண்ணினால் அதுதான் முழுமையான தப்பு. உலகம் என்னும் சிறைக்குள் அகப்படுவதல்லவா பிறப்பு என்னும் நிகழ்ச்சி. உலகசமுதாயத்தில்தான் எத்தனை அடிமைத்தனங்கள் ஒவ்வொரு குழந்தையையும் பிணைத்துக் கொள்கின்றன? பருவம் வந்தும் இளமையை அனுபவிக்க முடியாது. விரும்பிய ஆணை அல்லது பெண்ணை நேசிக்க முடியாது. அப்பா அம்மாவுக்கு அடிபணிந்து கைகாட்டியவனுக்கு தலைகுனியும் அவஸ்தை எம்மிடம்தானே உள்ளது? ஓ வாழ்கையே அடிமைச் சிறையா? மற்றவனுக்குப் பயந்தும் , மற்றவனையே நினைந்தும் வாழ்வதுதான் உண்மை வாழ்கையா?
எம்மூத்த தலைமுறை சமுதாயத்திற்குப் பயப்படுவதால் , இளைய சமுதாயத்தின் ஆசைகள் பலிக்கடாவாக்கப் படுகின்றது. இது நியாயமான ஒன்றா? ஏன் இந்தப் பறவைகளுக்கு உள்ள புரிந்துணர்வு மனிதனுக்கு மாத்திரம் இல்லாமல் போய்விட்டது? ஆறாவது அறிவுடன் இத்தனை பிளவுகளுக்குள் வாழ்வதிலும் , ஐந்தறிவுடன் அந்த சுதந்திரப் பறவைகளாய் வாழ்வது மேலான ஒன்றல்லவா? மனிதன் எப்போது இதை உணரப்போகின்றான்? மனிதஇனம் தானாயும் இவற்றைப் புரிந்து கொள்வதில்லை. மற்றவர் கூறியும் ஏற்றுக் கொள்வதில்லை. இதில் மாற்றமென்பது............".? " தோன்றியது அவளுக்கு.

இந்த மனிதசமுதாயத்தில் இருந்து விலகி நானும் ஸ்தீக்கும் அமைதியாக வாழ ஒரு இடம் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? கூடியிருந்து குதர்க்கப் படுவதிலும் தனிமையில் அமைதி கிடைக்குமென்றால் ஏன் தனிமையை நாடிச் செல்லக் கூடாது.? அது நடக்குமா? நடக்கூடிய சிலவற்றையே நம்முன்னோர்...

(வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர் இலக்க நிலையம் /யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

**சர்வதேசதமிழர் கவியரங்கு**
**தலைவர்கள் விரைக!விரைக!!**

கண்ணென ஒக்கும்நாடு
கண்ணீரும் குருதியும்தோய்ந்து
மண்டிய புகழெலாம் தேய்ந்து
மார்பு வலியொடு கிடக்க
அண்ணன் தம்பிக்குள் சண்டை
ஆயிரம் இருந்திடும் என்னும்
திண்ணைப்பேச்சினை விட்டு
திடமொடு செயற்படவேண்டும்.

பகட்டு வாழ்வும் பணமும்
பதவியும் வேண்டி தினமும்
பகரும் வார்த்தை தவிர்த்து
பயனுறு காரியம் செய்து
அகதி என்று அலையும்
அவலம் அழித்து சொந்த
நகரில் வாழ எமக்கு
நல்லன செய்திடவேண்டும்.

கவலைகள் அற்ற நாளைய
கனவினில் வாழ்தலை விட்டு
தவறுகள் செய்தவர் என்று
சரித்திரம் செப்பிடும் முன்னர்
துவக்குவேட்டுச் சத்தம்
துளைக்கும் காதில் எங்கள்
சமயக் கோவில் மணிச்
சத்தம் ஒலிக்கவழி வேண்டும்.

தூவும் கண்டன வார்த்தைச்
சுகங்களை மறந்து மாற்றார்
நோவும் வலியும் எதுவென
நோக்கும் அறிவு பெற்றே
பூவும் பொட்டும் இழக்கும்
பூவையர் அறிதெனச் சொல்ல
சாவுகள் குறைந்திட இங்கு
சமாதானம் வரச்செய்ய வேண்டும்.
**வ.க.பரமநாதன்-டென்மார்க்**

-----------------------------

**அன்று வரையநினைத்தது...!**

அன்று வரைய நினைத்தது
சித்திரம் மட்டுமே-ஆனால்
வரையவந்தவை கீறல்களோ!
இன்று நான் தீட்டுவது
சித்திரம் மட்டுமே தவிர
கிறுக்கல்களல்ல!
அன்பு,பாசம் தான் வாழ்க்கை
என அறியவந்தபோது
வம்பு,கசப்பு முட்களையே
தோளில் சுமந்தேன்
முட்களை முறித்துவிட்டு
தனிமை மேடையில்
துயரப்பன்னீரை தெளித்து
வாழவந்தபோது,
நெஞ்சில் கனக்கிறது நேச பாசம்!
பலநாள் பசியோடு தவித்த
பச்சிளம் கன்றுக்கு
சமூகவேலி தடையாயிருந்தும்
பரிவுகொண்டு பாலூட்டும்
தாய்ப்பசு போல் தெரிகிறதே
அவ்வுள்ளத்தின் காதல்!
இதனால் இன்று புண்களை
மூடும் பூந்தோரணம் ஒன்று
உண்டென்பதை
முடிவிலும் ஓர் ஆரம்பம்
என்னை சமாதானப்படுத்துகிறது!
**வன்னியூர் வளர்மதி-கனடா**

-----------------------------

**ஆத்மாவை நோக்கவேண்டும்!**

அதிகாரம் அடக்குமுறையானால்
பரிகாரம் பலவந்தமாகும்
அதிகாரம் அன்புமயமானால்
அநியாயம் அழிந்துபோகும்
உணர்வுள்ள மக்கள் என்றும்
உண்மையைப் புரிந்து கொள்வர்
திறனற்ற பிண்டமென்றால்
திராணியற் றழிந்து போவர்

எதிலுமோர் கொள்கைவேண்டும்
அதிலுமோர் பற்றுவேண்டும்
அன்பினைப்பகிர்ந்து கொள்ள
அதற்கென்ன தகுதி வேண்டும்
புண்பட்ட நெஞ்சமிங்கே
புலம்புதே யாவரும் கேளீர்
புதுயுகம் படைத்திடவே
புறப்பட்டு ஓடிவாரீர்!

பால்முகம் காட்டி அழும்
பாப்பாவில் சாதி இல்லை
போர்முகம் காட்டு முள்ளம்
புரிந்திடவேண்டும் இதனை
ஊனுடல் அழிந்துபோகும்
உள்ளத்தால் ஒன்றே நாம்
அன்பினுள் அமிழ்ந்து மேலாய்
ஆத்மாவை நோக்கவேண்டும்
**ஆரையம்பதி க.சபாரத்தினம்**

-----------------------------

**என்ன உலகமடா!**

சுத்தம் சோறு போடுமாம்
எங்கள் வயிறும்
எங்கள் வீட்டுஅடுப்பும்
எங்கள் வீட்டுப்பானையும்
சுத்தமாகத்தான் உள்ளது!
சோற்றுக்குத்தான் வழியில்லை

-----------------------------

தங்கம்கூட, தீயிலிட்டபின் தான்
நகை.
மூங்கில்கூட துளையிட்ட பின்தான்
புல்லாங்குழல்.
பருத்திகூட நெய்திட்டபின்தான்
ஆடை.
களிமண் கூட வனைந்தபின் தான்
பானை.
நீ கூட உழைத்திட்டபின்தான்
மனிதன்!

-----------------------------

எல்லோரும்
நல்லவரே!
தூங்கும்போது

-----------------------------

இயற்கையின்
கோபம்தான்
புயல்!

-----------------------------

பூமியின்
பொறுமைதான்
பூகம்பம்!

-----------------------------

இருளுக்காக வருந்தாதே
ஒளியை ஏற்று
இருளை விரட்டு!

-----------------------------

ஆட்டுக்கு சிறையிட்டான்
பாசத்தால் அல்ல
கறிக்காக!
**இரா.இரவி-மதுரை 1**

-----------------------------

**சொன்ன கதை!**

எருதுகள் சிங்கம்
கதையை சொன்னார்கள்
ஒற்றுமையை பேணுவதற்காக!
ஆனால் கற்றதோ
ஒற்றுமையை குலைப்பதற்கு..!
எருமைகட்கு புரியுமா
ஒற்றுமைபற்றி.....?
**கோட்டைக்குப்பம்**
**முகமது கவுஸ் - குவைத்.**

-----------------------------

**பொலிந்திடுமோ....!**

பொன்னுக்கும் போத்தலுக்கும்
பெண்ணுக்கும் பொருளுக்கும்
கண்கெட்டுப்போனான் நம்தமிழன்
கன்னித்தமிழ் விற்றான்!
திரையில் நடப்பதெல்லாம்
திடம் என நினைத்த பின்னடம்
மனைவி,மக்கள் பசியில்வாட
மதுவருந்தும் தமிழ்முண்டம்!
சிங்களத்தி சென்று வந்தாள்
ஸ்ரீராமன் அவதாரமும்
உன்னிடத்தில் தந்தேன் வரம்
என்படையெலாம்,உன்படைஎன்றான்
கொடுத்தவரமதனால் குடியிழந்து
வனம்சென்றார்
தொடுத்தபோரதனை
தொலைநோக்கியால் பார்த்து
விடுத்தார்,சிங்களர்க்கு தகவல்களை
கெடுத்தார் எம்போரை கெடுத்தாரே!
**மணிபல்லவன் - பாங்கொக்**

சர்வதேசதமிழரை விற்பனை செய்து உதவிபுரிவோர் தொடர்புறுக!விற்றதும் உடன் பணம் அனுப்புக! உதவுக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

ISSN:0805-7443 SARVADESA TAMILER 15,-Nkr Vol.3;Nr.3;May-June.96

# C-BLAD

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
சர்வதேசதமிழர்
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

Subscription/yr/6 issues:: Scandinavia:90,-NKr; other countries::15 USD
Postgiro:0823 0899 453 ,Postbanken,0021 Oslo Bankgiro:6066 1012 199,kredit kassen bank,3000 Drammen

***Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet .***

**கருணாநிதியே வருக!வருக!!**

கன்னித்தமிழமுதே
கலையுலகின் பொக்கிசமே!
சென்னிக்களஞ்சியமே
ரோர்வில்லாப்பொக்கிரமே
மன்னித்தருளுகின்ற
மாதெய்வக்குணத்தோனே
மன்னர் மதியோனே
மாண்புமிகு முதலமைச்சே!

உன்னி ஒருதரம்நீ
உறுக்கிவிட்டால்ஈழத்தில்
சன்னச்சத்தமெல்லாம்
ஓயாதோ அங்கு!
பன்னீர் பெருக்கெடுத்து
ஓடாதோ எங்கள்
சின்னக்குழந்தை எல்லாம்
சிரிக்காதோ.....!!
**செ.நாகேந்திரன்-லண்டன்.**

---

**நான் என்ன இனம்...?**
நான் போகவிட்டு
புறஞ்சொல்வதில்லை.
சொன்னதைக்கொண்டு
திரிவதில்லை.
பொறாமைப்புற்றில் வாழ்வதில்லை
அயலவனுக்கு சகுனம் பிழைக்க
என்மூக்கை அறுப்பதில்லை
நன்றிமறந்தே வாழுமிவர்
தன்னினமாம் தமிழினத்தை
எப்படி நாயினம் என்பர்?
இது எனக்கு அவமானம்!
வொவ்..வொவ்...வொவ்....!
உள்ளதெல்லாம் பெற்றுவிட்டு
குற்றம்கூறும் கொற்றவராம்
தமிழரிடையே ........
நான் என்றும் மற்றவன் தான்.
வொவ்....வொவ்.....வொவ்....!
இனம் இனத்தை நாடும் என்று
மனிதர் சொன்னார்
தினம் வெறுத்துவாழ்வதென
தமிழர் முடிவுசெய்தார்!
ஒற்றுமையாய் ஒரியக்கமாயிருந்தால்
வென்றிருப்பர்விடுதலைபெற்றிருப்பர்
என்னினத்தை நான் குலைத்து
கலைப்பதுண்டு-இருப்பினும்
நான் நாயினம் தான்-ஐயோ
நான் தமிழன் இல்லை
தன்னினத்தைக் குறைகூறி
தான் தனித்துவமானவராம்
வேடிக்கையிது!
கம்பம் கண்டால் கால்தூக்குவேன்
இவரோ கதை கேட்டாலே
கால்தூக்குவார்!
கண்டம் விட்டு கண்டம் தாண்டி
காதில்வைத்து கடிக்கும் இவர்
என்னை எப்படி கடிநாயென்பார்
முகத்தின் முன்நடித்து
போகவிட்டு கடிக்கும் இவர்
எப்படி என்னை கடிநாய் என்பார்?
**தி.திலீபன்-ஒஸ்லோ,நோர்வே**

---

**இசையின் கனவு....!**
மேற்குதேசம் வந்து
மெல்லநானும் கனவுகாண
பழகிக்கொண்டேன்.
தெற்கிருந்து வந்தநானும்
தென்றலெனும் தமிழிசை
ரசிக்கப்பழகியவன்.
மேற்கத்து இசையில்
மெய்மறக்க முடியாமல்
மெல்லவென் செவிகளை
தெற்கே திருப்பினேன்
தெற்கிருந்து வந்த இசை
தென்றலல்ல-மாறாக
நாளாந்தம் நான்கேட்கும்
மேற்கத்து இசை!
மெல்லிசை கேட்க
மெல்லநானும் கனவுகாண
பழகிக்கொண்டேன்!
**மகேஸ்வரன்
குரோதரன்............நோர்வே**

---

**கல்கத்தா சம்பவம்...!**
மன்னித்துவிடு எங்களை
மனம்இரங்கி மன்னித்துவிடு!
நொடிப்பொழுதில் ஒருவேகம்
மனிதப்பண்பை அடித்து
சிக்சராய் பறக்கச்செய்துவிட்டது.
தாய்நாட்டின் பற்று
மிருகவெறியாய் போனது
கலை,விளையாட்டுக்கு
இழுக்கான அந்நாளை
மறந்துவிடு!
நடந்துவிட்டது...,
ஆனால் நம்பமுடியவில்லை!
விளையாட்டில் வெறியாட்டமா?
வன்மையாக கண்டிப்போம்!!
**ச.வெள்ளிங்கிரி...கேரளா**

---

**பதிலுரைப்பாய் கண்மணியே!**
மன்னவனும் மயங்கும்
மழைக்கால மலைமுகிலோ
என்னிதயம் வியக்கவைக்கும்
கருங்கூந்தல் உன்னதுவோ
படைநடுங்கும் பாம்பும்
உன்னிடத்தை தேடிவரும்
ஊர்பேசும் என்வீரம்
உன்விழிகள் நாடிவரும்
சேரமன்னன் வில்லினிலே
பகைவரை வென்றிட்டான்
நீயோ உன்புருவத்தால்
என்னிதயம் துளைத்திட்டாய்
அந்தித்தாமரை போல்
மலரும் உன்வதனம்!
இரவுநிலா கண்டபின்பே
நான் உறங்கச்செல்கின்றேன்.
என்மனதில் உள்ளதனை
வேண்டுகோளாய் விடுத்திட்டேன்
உன்னிதயம் எனக்கென்றே
பதிலுரையாய் கண்மணியே!!
**வி.அசோக்குமார்-தஞ்சாவூர்**

---

**என்அன்னைக்கு ஓர்அஞ்சலி!**
அம்மையே!உங்களை யான்
பார்க்கவும் எடுக்கவும்
கொடுத்து வைக்கவில்லையே!
உம்மையே நினைந்து
கண்களுடன் சேர்ந்து
நெஞ்சமும் அழுகிறதே!
செம்மையே செய்து
எமக்கு சுந்தரத்தமிழோடு
பாசத்தையும் ஊட்டிவளர்த்தாயே!
எம்மையே நீர் விட்டுப்பிரிந்தாலும்
ஆடும்சிதம்பர நாதன் அடியினில்
பேரானந்தம்பெற வேண்டுகிறேனே!
**ஆறுமுகம் சிவசோதி-மலேசியா**
(21.2.96ல் கொழும்பில் காலமான
தாயார் காரையூர் திருமதி.சிவகலை
ஆறுமுகம் அவர்கட்கு அஞ்சலி)

தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்!
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்